குழந்தைகள் பத்திரிகை
15-2-1976
60 காசு

கோகுலம்





பெரும்பாலான குழந்தைகள்
எதையும் செய்யும்
ரெக்ஸ் ஜெல்லி தந்தால்!
தங்கையின் பின்னலைப் பிடித்து இழுக்க மாட்டேன், நீங்கள் எனக்கு ராஸ்பெர்ரி ரெக்ஸ் ஜெல்லி தந்தால்
என் பொம்மையை உமாவுக்கு விளையாடத் தருவேன், அவள் எனக்கு ஸ்ட்ராபெர்ரி ரெக்ஸ் ஜெல்லி தந்தால்
நான் வீட்டுக் கணக்குகூடப் போடுவேன், செர்ரி ரெக்ஸ் ஜெல்லி தந்தால்
OBM-5472 TM
REX
JELLY CRYSTALS
RASPBERRY
தயாரிப்பது எளிது. தேவையில்லை பாலும் சர்க்கரையும்.
500 மி.லி. (½ லிட்டர்) நீரைக் கொதிக்க விடுங்கள். அதில் ஒரு பேக்கெட் ரெக்ஸ் ஜெல்லி படிகங்களைப் போட்டுக் கிளறுங்கள். பாலும் சர்க்கரையும் தேவையில்லை. குளிர விடுங்கள். பின்னர் அதை ரெஃப்ரிஜிரேட்டரிலோ அல்லது பனிக்கட்டியிலோ வைத்துப் படிய விடுங்கள். நன்றாகப் படிந்ததும், எடுத்துப் பரிமாறுங்கள். அப்படியே அல்லது பழம், கஸ்டர்டு, கேக், ஏதுடனும்.
அருமையான பொருள்களிலிருந்து மிகுந்த கவனத்துடன் பக்குவப் படுத்தப்பட்டதால், ஜெல்லி படிகங்களிலேயே மிகச் சிறந்தவை ரெக்ஸ் ஜெல்லி படிகங்கள். ஒரு பேக்கெட் வீட்டில் இருக்கட்டும்...எப்போதுமே!
ரெக்ஸ்
ஜெல்லி படிகங்கள்
கார்ன் பிராடக்ட்ஸ் கோ. (இந்தியா) பிரைவேட் லிட்.
ஸ்ரீநிவாஸ் ஹவுஸ்,
எச். ஸோமானி மார்க்,
பம்பாய் 400 001.

கோகுலம்

மலர் 4 ※ இதழ் 23

பிப்ரவரி 15, 1976

ராட்சஸ, மாசி, 3



உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும் - பாரதியார்

சந்தா விகிதம்

இந்தியா

ஒரு வருடம்	ரூ. 15.00
ஆறு மாதம்	ரூ. 7.50

வெளிநாடுகள்

ஒரு வருடம்	ரூ. 40.00
ஆறு மாதம்	ரூ. 20.00

மனிதனும் ஆட்டுக் குட்டியும்



மனிதன்

ஆட்டுக் குட்டி ஆட்டுக் குட்டி
அருகில் ஓடிவா — நான்
அளவி லாமல் அருகம் புல்லை
அள்ளித் தருகிறேன்.

வேட்டை யாட வீட்டு நாயும்
விரட்டி வந்ததா? — உன்னைக்
காட்டி லுள்ள சிங்கம் புலியும்
கௌவ வந்ததா?

கூட்டி லுன்னை அடைத்து வைத்துக்
கொடுமை செய்திடேன் — சிறு
குழந்தை போலே எண்ணி உன்னைக்
கொஞ்சி மகிழ்வேன்.

ஓடி நீயும் ஒளிந்து கொள்ளும்
உண்மை என்னவோ? — அதை
உணர்த்தி னாலுன் துன்பம் தீர
உதவி செய்குவேன்.

ஆட்டுக்குட்டி

புலியும் அரியும் என்னை உண்ணல்
புவியில் இயற்கையாய் — அந்த
அலகி லாத ஈசன் செய்த
அருளே என்குவேன்.

நாயும் என்னை விரட்டி வந்து
நலிவு செய்வதும் — அந்த
நாயகன்தன் நாட்டம் என்றே
நானும் கருதுவேன்.

அருகம் புல்லை அளவி லாமல்
அள்ளித் தருகிறேன் — என்று
விரும்பிச் சொல்லும் மனித னேநீ
மெலிந்த என்னையே

கொன்று தின்ன எண்ணிப் புல்லைக்
கொடுத்து மகிழ்கிறாய் — அதைக்
கண்டு கொண்ட காரணத்தால்
கவலை கொள்கிறேன்.

—சாரதிதாசன்

அறநெறி

திருமுருக கிருபானந்த வாரியார்

வர வர மாமியார் கழுதைபோலானாள்!

''வர வர மாமி கழுதை போலானாள்'' என்பது ஒரு பழமொழி. இந்த வரலாறு இதனை விளக்குகிறது.

குணரத்தினம் என்பவன் தன் மனைவியுடன் சுகமே வாழ்ந்தான். அவனுக்குத் தாயார் மட்டும் இருந்தாள். இளமையில் அவன் தந்தையை இழந்தவன். தாய் கூலி வேலை செய்து மகனைப் படிக்க வைத்துக் கண்ணை இமை காப்பது போல் அவனை வளர்த்து ஆளாக்கினாள்.

குணரத்தினம் தொழிலதிபனாகச் செல்வச் சிறப்புடன் விளங்கினான். அவன் மனைவி ''எனக்கும் ஓர் அம்மா. அப்பா இல்லை. உங்களுக்கும் ஓர் அம்மா. என் தாய் கிராமத்தில் தனியே இருந்து துன்பத்தை அனுபவிக்கின்றாள். நமக்கு நிரம்பச் செல்வம் இருக்கிறது. நீங்கள் போய் என் தாயை அழைத்து வாருங்கள். என் தாயும் உங்கள் தாயும் சேர்ந்து இங்கே சுகமே இருக்கட்டும்'' என்று தினம் தினம் கூறி வந்தாள்.

குணரத்தினம், 'நாம் சதா வெளியூர் போய் விடுகிறோம். இவளும் இவள் தாயும் சேர்ந்து நமது தாயை வேதனைப்படுத்தக் கூடும்' என்று தனக்குள் நினைத்து மனைவியின் வார்த்தைக்கு இடம் தராமல் இருந்தான்.

மனைவி இதையே நாளும் நாளும் கூறி அவனைத் துளைத்தாள். அவனுடைய விருப்பத்துக்கு இசைந்தான். 'நமது அன்பும் ஆதரவும் அம்மாவுக்கு இருக்கும்போது இவள் என்ன செய்துவிட முடியும்?' என்று எண்ணினான்.

மாமியாரை அழைத்து வந்து வீட்டில் சேர்த்தான். ஆரம்பத்தில் அவன் மாமியும் மனைவியும் குணரத்தினத்தின் அம்மாவிடம் மிகவும் அன்புடன் ஒழுகுவதுபோல் நடித்தார்கள். இதனைக் கண்ட குணரத்தினம் மகிழ்ந்தான்.

பின்னர் கேழ்வரகுக் களியும் மிளகாய் ரசமும்தான் கிழவிக்கு உணவு. ரவா கிச்சடி, ஆப்பிள் பச்சடி, வடை, பாயசம், அல்வா முதலிய உயர்ந்த உணவுகள் இவர்களுக்கு.

இப்படிச் சில மாதங்கள் கழிந்தன. கிழவி மிகவும் சாந்தமானவள். இதனை மகனுக்கு அறிவிக்காமல் தன் விதியை நொந்து வெந்தாள்.

மருமகளும் அவள் தாயும் இல்லாத நேரம் பார்த்து: ''என் அருமை மகனே! நீ சாப்பிடும்போது என்னையும் உடன் வைத்து உண்டு வா'' என்றாள்.

அவன் ஊகத்தால் உணர்ந்துகொண்டான். நம் அன்னைக்கு நல்லுணவு தரவில்லை போலும் என்று அறிந்தான்.

அன்று பகல் உணவுக்கு வந்தவன், ''அம்மா! நீங்களும் வாருங்கள். ஜானகி! அம்மாவுக்கும் ஓர் இலை யிட்டுப் பரிமாறு'' என்றான் கடுமையாக.

''நீங்கள் வியாபாரத்துக்கு வெளியே போகிறவர். அவசரமாகச் சாப்பிடுவீர். அம்மாவும் நாங்களும் ஆர அமரப் பொறுமையாகச் சாப்பிடுவோம்'' என்றாள் அவன் மனைவி.

''ஜானகி! அம்மா என்னுடன் சாப்பிடட்டும்'' என்றான்.

உடனே ஜானகி தாடகையைப் போல் சீறி, ''நான் என் தாயை விடப் பன்மடங்கு நல்லுணவு தந்து உபசரிக்கின்றேன். மகனிடம் என்னைப் பற்றிக் கோள் கூறினீரா? இது முறையா? இது தகுமா? உமக்குத் தெய்வம் துணை புரியுமா?'' என்று கூறிக் கடிந்தாள்.

வரித் தொல்லை முதலிய துயரத்தால் வருந்திய குணரத்தினம், ''இது



என்ன ஃபாராட்டம். எனக்கு மரணம் கூட வரவில்லையே?'' என்று கூறி நொந்து கொண்டான்.

கிழவி உள்ளம் உலைந்து மறு நாள் விடியற் காலம் வீட்டை விட்டுப் புறப் பட்டு அழுது கொண்டே போனாள். அடுத்த காட்டில் உள்ள வனதுர்க்கைக் கோயிலுக்குப் போய்த் தொழுதாள்; அழுதாள்.

''கருணும்பிகை! இனி ஏன் நான் உலகில் வாழ வேண்டும்? உன் திரு வடியில் என்னைச் சேர்த்துக் கொள்'' என்று விண்ணப்பம் செய்து அம்பிகை யின் தாள் மலரில் தலையை மோத முயன்றாள்.

அம்பிகை, ''அம்மா! நீ தற்கொலை செய்துகொள்ளாதே. இந்தா! இந்த மாம்பழத்தைச் சாப்பிட்டுப் பசியாறு'' என்று கூறி ஒரு தெய்வ மாம்பழத்தை வழங்கினாள்.

கிழவி அப்பழத்தை வாங்கினாள். பெற்ற மனம் பித்தல்லவா? அதை மக னுக்குத் தர வேண்டும் என்று எண்ணி மடியில் வைத்துக் கொண்டாள்.

தாயைக் காணாத குணரத்தினம், உள்ளம் உலைந்து தாயைத் தேடிப் போய் ''அம்மா! அம்மா!'' என்று காடெல்லாம் அலைந்தான்.


வனதுர்க்கை கோயிலில் அன்னை யைக் கண்டு தொழுதான்; அழுதான். ''மகனே! அழாதே! இது அம்பிகை தந்த அருங்கனி. இதனை உண்பாயாக!'' என்றாள்.

''அம்மா, வேண்டாம். நீங்கள் சாப் பிடுங்கள்'' என்றான் மகன்.

கிழவி கோயிலுக்கு அருகிலுள்ள தீர்த் தத்தில் முழுகிப் பிறகு பழத்தை உண் டாள். ''அம்மா! நீங்கள் நல்லுணவு இன்றி மெலிந்து விட்டீர்கள்'' என்று அன்புடன் கூறி, தாயாரை முதுகில் சுமந்து கொண்டு வீட்டுக்கு வந்து இறக்கினான். அம்பிகை தந்த பழத் தின் மகிமையால் கிழவி குமரியாகி விட்டாள்!

ஜானகி தன் கணவரைப் பார்த்து, ''இவர் யார்?'' என்றாள்.

''ஏண்டீ! தெரியவில்லையா? உன் மாமி. இனி நீ ஒன்றும் என் தாயை அலட்சியம் பண்ண முடியாது. எச் சரிக்கை. நானும் குமரன்; என் அம்மா குமரி. நீ குமரி; உன் தாய் கிழவி''



என்று சொல்லிச் சிரித்தான் குணரத்தினம்.

ஜானகி திகைத்தாள். மாமியை வீழ்ந்து கும்பிட்டாள். ''மாமி! என் பிழையை மன்னித்து விடுங்கள். நீங்கள் எப்படிக் குமரியாக ஆனீர்கள்?'' என்று வினவினாள்.

கள்ளமில்லாத அவள், நடந்ததை நவின்றாள்.

ஜானகி தன் தாயைப் பார்த்து, ''நீயும் போய் வனதுர்க்கையிடம் பழம் வாங்கி உண்டு குமரியாகிவிடு'' என்றாள்.

ஜானகியின் தாய் பொல்லாதவள். அன்று விடியற்காலை காட்டுக்குப் போய் வனதுர்க்கையின் பாதத்தில் தலையை மோதப் போவது போலப் பாசாங்கு செய்தாள்.

அவள் முன் ஒரு பழம் வந்து வீழ்ந்தது. கிழவி அதை ஆவலோடு எடுத்து வைத்துக் கொண்டாள்.

ஜானகி, ''உங்கள் தாயாரைத் தூக்கிக்கொண்டு வந்தது போல் என் தாயாரையும் தூக்கிக்கொண்டு வாருங்கள்'' என்றாள்.

''ஏண்டீ! நான் என் அம்மாவைச் சுமந்து வந்தது போல் நீ போய் உன் அம்மாவைச் சுமந்து கொண்டு வா!''

''நான் பெண்ணாயிற்றே! காட்டுக்குப் போக முடியுமா? தயவுசெய்து போங்கள்!''

குணரத்தினம் நல்லது என்று காட்டுக்குப் போனான். கிழவி மாம்பழத்துடன் அங்கு இருந்தாள்.

''மாப்பிள்ளை! பழம் சாப்பிடலாமா?''

''வேண்டாம் மாமி! நீங்களே சாப்பிடுங்கள்!''

கிழவி பல் விளக்காமலே பழத்தைத் தின்றாள்.

நம் தாய் குமரியானதைப் பார்க்கவில்லையே? இப்போது மாமி எப்படிக் குமரியாகிறாள் என்பதைப் பார்க்க வேண்டும் என்று எண்ணிப் பாதி வழியில் மாமியைக் கீழே விட்டுப் பார்த்தான். அவளுக்கு நான்கு கால்கள் முளைத்திருந்தன.

மறுபடியும் தூக்கிக்கொண்டு ஊருக்கருகில் வந்து கீழே இறக்கிப் பார்த்தான். கழுத்து வரையில் கழுதை வடிவாகி யிருந்தாள்.

மறுபடியும் சுமந்து வீட்டின் அருகே விட்டான். வெள்ளை மூக்குடன் கழுதையாக ஆனாள். துணியைக் கழுத்தில் இட்டு இழுத்து வந்து வீட்டில் விட்டான். ''ஜானகி! வர வர மாமி கழுதை போலானாள்'' என்றான் மனைவியிடம். ஜானகி அயர்ந்து நின்றாள்.

குடியரசைப் பற்றி என்ன தெரியும்?

1. 1857ல் ஆண்கள் உடையில் பிரிட்டிஷ் ராணுவத்துடன் போராடிய பெண்மணி யார்?
ஜான்ஸி ராணி

2. காங்கிரஸ் மகாசபை நிறுவப்பட்டு எத்தனை ஆண்டுகள் ஆகின்றன?
88 ஆண்டுகள்

3. இந்தியாவில் ஹோம் ரூல் என்ற சுயாட்சி இயக்கத்தைத் தொடங்கியவர் யார்?
அன்னிபெசண்ட்

4. படுகொலை நடந்த ஜாலியன் வாலாபாக் தோட்டம் இருப்பது எந்த நகரத்தில்?
அமிர்தசரஸில்

5. வ. உ. சி. தொடங்கிய சுதேசிக் கம்பெனியின் கப்பல்கள் தூத்துக்குடியிலிருந்து எந்தத் துறைமுகத்துக்குச் சென்று வந்தன?
கொழும்பு

6. 1899ல் வைஸ்ராயாக இருந்த கர்ஸான் பிரபு வங்காளத்தை இரண்டு மாகாணங்களாகத் துண்டாக்கினார். ஒன்றின் பெயர் கிழக்கு வங்காளம். மற்றதின் பெயர் என்ன?
அஸ்ஸாம்

7. அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன், சீனா — இந்த நாடுகளில் ஒன்று குடியரசல்ல. அது எது?
பிரிட்டன்

8. சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் பதவியை வகித்தவர் யார்?
ராஜாஜி

9. இந்தியக் குடியரசின் அமைப்பை வகுப்பதற்காக ஏற்பட்ட அரசியல் நிர்ணய சபையின் தலைவராக விளங்கியவர் யார்?
ராஜேந்திர பிரஸாத்

10. 1940. 1947, 1950, 1952 இந்தியா குடியரசானது எந்த வருஷம்?
1950

11. இந்தியா குடியரசானபோது காந்திஜி உயிருடன் இருந்தாரா?
இல்லை

— சுதாகரன்





மோட்டார் மன்னன்

விகேயெம்

"**படார்...!**" என்ற பெருத்த ஓசையோடு அது வெடித்துச் சிதறியது.

அது அவனுகத் தயாரித்த நீராவி யந்திரம் — ஸ்டீம் பாய்லர். பத்து காலன் கொள்ளும் ஒரு தகர டின்னில் நீரை நிரப்பி அதன் கீழே நெருப்பை எரிய விட்டுச் சோதனை நடத்திப் பார்த்தான். அவனுக்கு இருந்த கல்வி அறிவை விட ஆர்வம் அதிகமாக இருந்தது. டின் வெடித்து அவனைத் தூக்கி எறிந்ததோடு பள்ளிக்கூடத்தின் வேலியையும் சேதப்படுத்தி விட்டது.

அந்தப் பையன் அந்தச் சோதனையை மறுபடி செய்ய முற்படவில்லை. நீராவியின் சக்தி எப்படிப்பட்டது என்பதை அவன் அறிந்து கொண்டு விட்டானே!

மோட்டார் — ஆட்டோமோபைல்— கண்டுபிடிக்கப்பட்டு விட்டது அப்போது. ஆனால் அது இன்றுள்ளது போல் அவ்வளவு பிரபலமடையவில்லை. மோட்டார் வாகனம் பெரிய செல்வந்தர்களின் சொகுசுப் பொருளாகக் கருதப்பட்டது. பந்தய விளையாட்டுப் பொருளாக அதைக் கருதினர்களே தவிரப் பிரயாணம் செய்ய வேண்டுமானல் ரயிலையோ குதிரை பூட்டிய கோச்சுக்களையோதான் பெரும்பான்மையான மக்கள் நாடினர்கள். ஆதிநாள் கார்கள் அடிக்கடி பழுதடைந்தன. ஒரே சத்தமும், புழுதியும் அழுக்குமாக விளங்கின. சராசரி மனிதனும் பயன்படுத்தும் வாகனமாக மோட்டார் காரை முன்னணிக்குக் கொண்டு வந்தவர் யார் என்று தெரியுமா? சின்ன வயதில் டின்னிலே தண்ணீரைக் கொதிக்க வைத்து—அந்தப் பாய்லர் வெடித்து அதனல் நீராவியின் சக்தியை உணர்ந்து கொண்டானே ஒரு பையன், அவன்தான். அவன் பெயர் ஹென்றி ஃபோர்டு.

ரோல்ஸ்ராய்ஸ், மாரிஸ், ஆஸ்டின் என்ற பிரசித்திபெற்ற மோட்டார் தயா

ரிப்பாளர்கள் இங்கிலாந்தில் புகழ்பெற்றது போல் சராசரி அமெரிக்கனுக்கும் தெரிந்த நபராக விளங்கியவர் ஹென்றி ஃபோர்டு. கீழ்த்தர மக்களும் வாங்கக் கூடிய மோட்டார் காரைத் தயாரித்தளித்த அற்புத மனிதர் இவர். இருபது வருஷங்கள் ஒரே மாடலை மாற்றாமல் தயாரித்துக் குவித்தவர் இந்த மோட்டார் மன்னர்.

அமெரிக்காவிலுள்ள மிச்சிகன் மாநிலத்தில் டியர்பார்ன் என்னும் கிராமத்தில் 1863ம் ஆண்டு பிறந்தார் ஹென்றி. தகப்பனார் அயர்லாந்துக்காரர். தாயார் டச்சுக்காரர். விவசாயக் குடும்பம். அமெரிக்காவில் பிழைப்புக்காகக் குடியேறினவர்கள். ஹென்றி வயது வந்த வாலிபனானதும் தங்களுக்கு உதவியாக நிலத்தில் உழைக்க, உதவ வருவான் என்று காத்திருந்தார்கள். ஆனால் ஹென்றிக்கோ சின்ன வயதிலேயே யந்திரங்களின் மீது மோகம் ஏற்பட்டது. பொருள்களைத் தட்டிக் கொட்டுவான்; வெட்டி ஒட்டுவான். தையல் ஊசியைக் கொண்டு அண்டை அயலாரின் இயங்காத அலாரம் கடிகாரங்களை ஓட வைத்து ரிப்பேர் செய்து கொடுப்பான். பதின்மூன்று வயதிலேயே இந்த வேலைத்தனங்களை யெல்லாம் விரும்பினான். விவசாயப் பண்ணையில் சொந்தமாக ஒரு யந்திரக் கூடத்தை அமைத்துக் கொண்டான். இந்த வயதில் எல்லாப் பையன்களும் ஆசைப்படுவதைப் போலவே ஆராய்ச்சிகள் செய்வதில் ஆசை உடையவனாக இருந்தான். ஆனால் ஹென்றியின் தகப்பனார் தம் மகன் ஒரு மெக்கானிக்காவதை விரும்பவில்லை. மகனுக்குத் தம் நிலத்தில் ஒரு பகுதியைப் பிரித்துக் கொடுத்தார். தம்மைப் போலவே மகனும் பண்ணைக்காரனாகப் பரிணமிப்பான் என்று நம்பினார். ஆனால் ஹென்றி மூன்றே ஆண்டுகளில் அந்த நிலத்தை விற்றுவிட்டு டெட்ராய்ட் நகரை நோக்கிக் கிளம்பி விட்டான், ஒரு மெக்கானிக்காக மாற.

எடிசன் கம்பெனியில் மெக்கானிக் வேலை. அது புகழ் பெற்ற தாமஸ் ஆல்வா எடிசனின் நிறுவனம். எடிசன் மிகப் பெரிய விஞ்ஞானியும் கண்டுபிடிப்பாளருமாயிற்றே. இவர் ஹென்றியின் திறமை அறிந்தார். பின்னால் தம் கம்பெனியில் பணியாற்றுவதை விட்டு விட்டு அவனது உள்ளம் கவர்ந்த மோட்டார் கார் தயாரிப்பில் கவனம் செலுத்தும்படி அறிவுரை வழங்கினார் எடிசன். எடிசனிடம் பணியாற்றும் போதே ஹென்றி தானியங்கும் வண்டிகளை அமைப்பது பற்றி ஆராய்ந்து கொண்டிருந்தார். முதலில் நிலங்களில் இயங்கும் ஃபார்ம் லோகோமோடிவையும் பிறகு நீராவியின் சக்தியினால் வீதிகளில் செல்லும் வண்டியையும் தயாரித்தார். ஒரு சமயம் சிறிய பெட்ரோல் இன்ஜினால் இயங்கும் பம்ப் ஒன்றைக் கண்டார். உடனே இந்தப் புதிய சக்தியைக் கொண்டுதான் இனி மோட்டார்களைத் தயாரிக்க வேண்டும் என்று தீர்மானித்தார் ஹென்றி. ஆனால்

வெற்றிப் பாதை அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. அப்படியொரு கனவு உருவாக ஐந்து ஆண்டுகள் ஆயிற்று ஹென்றி போர்டுக்கு. அதற்கு வேண்டிய எல்லாப் பாகங்களையும் தாமே தயாரித்துக் கொண்டார். நான்கு பழைய சைக்கிள் சக்கரங்கள்—நீராவி யந்திரத்தின் எக்ஸாஸ்ட் பைப்பைக் கொண்டு இரு சிலிண்டர்களைத் தயாரித்தார். பழைய சைக்கிளின் சாடில்—(Saddle) இவரது காரின் ஸீட்டாக அமைந்தது. ஸ்டீரிங் உழவன் நுகத் தடிக்குப் பயன்படுத்தும் கைப் பிடி. இப்படியாக ஃபோர்டு தன் கனவுக் காரை உருவாக்கிக் கொண்டிருந்தார். அது ஒரு கரடு முரடான யந்திரம். ரிவர்ஸ் கியரோ, பிரேக்கோ எதுவும் கிடையாது. இரவு வேளைகளில்தான் இந்த யந்திர வேலையில் ஈடுபடுவார். வீட்டில் நிலக் கரி சேமிப்புக் கிடங்கிலே தான் இந்தக் கார் உருவாகிக் கொண்டிருந்தது. ஒரு தினுசாக் வாகனம் உருவானதும் அதை வெளியே கொண்டு வர முற்பட்ட போதுதான் அந்த அதிர்ச்சி தரும் உண்மை தெரிந்தது. நிலக்கரிக் கிடங்கின் வாசல் இந்த வாகனம் வெளிவரும் அளவுக்குப் பெரிதாக இல்லை !


ஹென்றி இதனால் இடிந்து போய் விடுவாரா ? கோடரியை எடுத்தார். கோல் ஷெட்டின் சுவரைப் பிளந்து இடித்து வழி உண்டாக்கி வண்டியை வெளியே கொண்டு வந்துவிட்டார். அப்போது நள்ளிரவு இரண்டு மணி மே மாதத்திய நடுக்கும் குளிர். 1896ம் ஆண்டு. நான்கு சக்கரக் சைக்கிள் போன்றிருந்த அந்த வாகனத்தைத் தள்ளிக் கொண்டு வந்து நிறுத்தினர். அண்டை அயலார்களின் தூக்கத்துக்குத் தொந்தரவாக இருக்குமே என்று யோசிக்கவில்லை. வண்டியை இயக்கும் கைப் பிடியைத் திருப்பினர். யந்திரம் உறுமிற்று, கனைத்தது — உயிர் பெற்றது. சைக்கிள் சீட்டில் ஏறி அமர்ந்து கொண்டார். வெற்றிப் பெருமிதத்துடன் வீட்டைச் சுற்றிச் சுற்றி வந்தார். ஹென்றி ஃபோர்டின் முதல் கார் உலாக் கிளம்பியது இப்படித்தான்.

வெற்றிக் களிப்பில் காலையில் தம் நண்பர்களுக்கெல்லாம் கார் சவாரி வழங்கி மகிழ்ந்தார். ஹென்றியின் வாகனத்தில் திருப்தி அடைந்த நண்பர்கள், இன்னும் சிறப்பான முறையில் வண்டி தயாரிக்கப் பொருள் கடனுகக் கொடுத்தார்கள். வீதியில் ஓடக் கூடிய கௌரவமான தோற்றத்தில் ஒரு வண்டியை 1899ல் தயாரித்தார். ஆனாலும் வெற்றியின் எல்லைக்கு


ஃபோர்டு மாடல் கார்கள்




1. 1909ல் வெளிவந்த 'T' மாடல்




2. 1908 — "T" மாடல் ரேர்



3. 1917ல் ஆண்டு ஃபோர்டு 'கோபே'



4. 1926ல் வெளியான 'ஸ்போர்ட்ஸ் ரனபோ'



இன்னும் வரவில்லை. டெட்ராய்டில் தொழில் அதிபர்களை இணங்க வைத்து ஒரு கார் தயாரிப்பு நிறுவனத்தை உருவாக்கினார். ஆனால் அது தோல்வியில் முடிந்தது. ஒரு காரை உருவாக்கும் திறமை வேறு. அதை எப்படித் தயாரிக்க வேண்டும் என்ற தொழில் நுட்பம் வேறு. ஹென்றி அறிந்து கொள்ள வேண்டியது இன்னும் எவ்வளவோ இருந்தது. தோல்விகள் வெற்றிப் பாதையின் படிகள் என்பது போலப் பல தோல்விகளுக்குப் பிறகு 1903ல் ஹென்றி — ஃபோர்டு மோட்டார் கம்பெனி என்ற ஸ்தாபனத்தைக் கூட்டாளிகளுடன் ஆரம்பித்தார். இந்தத் தடவை ஹென்றி பொருள்களைச் செய்து குவிக்கும் தொழில் திறன் பெற்றவராகியிருந்தார். புதிய நிறுவனம் ஆரம்பத்திலிருந்தே வெற்றிப் பாதையில் வீறு நடை போட ஆரம்பித்தது. சராசரி மனிதனும் வாங்கக் கூடிய எளிய கார்களைத் தயாரிக்க வேண்டும் என்பதுதான் ஹென்றியின் நோக்கம். ஒரு சிலரே வாங்கக்கூடிய விலை மதிப்பு மிக்க சொகுசுக் கார்களை உற்பத்தி செய்ய விரும்பவில்லை அவர். ஆனால் அவரது கூட்டாளியோ பகட்டுக் கார்களையே மார்க்கெட்டுக்கு அனுப்ப வேண்டும் என்றார். ஆனால் ஹென்றி தமது கொள்கையில் பிடிவாதமாக இருந்து சாமானியனுக்கான கார்களையே தயாரித்தார். தம் முடிவே சரி என்பதையும் விரைவிலேயே நிரூபித்துக் காட்டினார்.

ஃபோர்டு தாம் தயாரிக்கும் கார்களை இனங் கண்டு கொள்ள ஆங்கில எழுத்து வரிசையில் பெயரிட்டார். மாடல், 'ஏ' 'பி' 'சி' என்று தயாரிப்பு வரிசை நீண்டு கொண்டே போயிற்று. 1907ல் 'T' எழுத்தை மாடல் எட்டியது.


இந்த 'T' மாடல் ரொம்பப் பிரபலமாயிற்று. இதன் அமைப்பை மாற்றாமல் இருபது ஆண்டுகளுக்குக் கார்களைச் செய்து குவித்தார் ஹென்றி. மிகக் குறைந்த விலையில் இது பொது மக்களுக்குக் கிடைக்கத் தயாரிப்புச் செலவுகளைக் கவனமாகப் பார்த்துக் கொண்டார். 'T' — மாடல் கார்களின் விலை ஐந்நூறு டாலர்களாக இருந்தது. ஆகவே ஃபோர்டு கார்களுக்கு ஏக கிராக்கி. முதல் ஆண்டில் 8000 'T' மாடல்களை விற்பனைக்கு அளித்த ஃபோர்டு கம்பெனி 1914ல் 2,50,000 வண்டிகளை மார்க்கெட்டுக்கு அனுப்பியது.

ஹென்றி இப்போது கோடீசுவரராகி விட்டார். செல்வம் மழையாக வந்து பொழிந்து கொண்டிருந்தது. ஸ்தாபனத்தைத் தொடங்க அவர் பங்குகளாகப் பெற்றதொகை 28000 டாலர்கள்தான். பங்குதாரர்களுக்கெல்லாம் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு லாபம் கிடைத்தது. 2500 டாலர் கடன் கொடுத்த ஒருவருக்கு 30 மில்லியன் டாலர்கள் கிடைத்ததென்றால் கணக்கிட்டுப் பாருங்களேன்.

புகழ்பெற்ற 'T' மாடல் கார்கள் அமெரிக்க நாட்டின் எல்லாச் சாலைகளிலும் பறந்துகொண்டிருந்தன. மேலும், மேலும் அந்த மாடல் கார்களைச் செய்து குவித்துக் கொண்டே இருந்தார் ஹென்றி. 1927 வரை! 15,007,033 கார்கள் உற்பத்தியாகிவிட்டன. காரணம் இந்த மாடல் கார்கள் உறுதியானவை. எந்த ரஸ்தாவிலும் சுலபமாகப் போயின. கோளாறு ஏற்படுவது குறைவு. அப்படி ஏற்பட்டாலும் அதைப் பழுது பார்க்க வசதியும் உபரிப் பொருள்களும் உடனுக்குடன் கிடைத்தன. வேகம் மணிக்கு 40 மைல்கள். காலனுக்கு 30 மைல் ஓடிற்று ஹென்றி ஃபோர்டின் இந்த 'T' மாடல் கார்கள்.

ஹென்றி தம் கார்த் தொழில் சாம்ராஜ்யத்தை ஐரோப்பாவிலும் விஸ்தரித்தார். இன்று ஃபோர்டு கார் தொழிற்சாலைகள் உலகம் முழுதும் இருக்கின்றன. டெட்ராய்ட்டில் உள்ள தலைமைத் தொழிற்சாலை மிகப் பெரியது. சுரங்கம், உருக்காலை, கண்ணாடித் தொழிற்சாலை, இப்படி — விதம் விதமான ஃபோர்டு மாடல்களுக்குத் தேவையான அத்தனை பொருள்களையும் ஒரே கூரையின் கீழ் தயாரிக்கும் வசதி மிக்கது. சாமானியனும் கார் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற குறிக்கோளுடன் பாடுபட்டு உயர்ந்த மோட்டார் மன்னன் ஹென்றி ஃபோர்டு 1947ல் தம் 84ம் வயதில் காலமானார்.


சிரிக்கச்
சிரிக்க!


"இந்தப் பயில்வானைக் கலியாணம் செய்துக்கிட்டது தப்பாப் போச்சே! தினமும் காலையில் அஞ்சரை எழுப்பப்பத்து வரையிலும் எண்ண வேண்டியிருக்கு!"
1, 2, 3, 4..
"நாம் இப்போ தூங்கப் போகிறோம், இல்லையா? நியூஸிலாந்திலிருப்பவர்கள் இப்பத்தான் படுக்கையை விட்டு எழுந்திருப்பார்கள்."
"அட, அவர்கள் அவ்வளவு சோம்பேறிகளா?"
"தேர்தலில் ஜெயித்தால் உங்க அப்பா என்ன பண்ணுவார்?"
"அட, நீ ஒண்ணு! தோற்றுப் போனால் என்ன பண்ணுவதென்று அவர் யோசிச்சுக் கிட்டிருக்கார்."
"இவ்வளவு நேரம் ஹெவி வெயிட் சாம்பியன்களுக்குள் சண்டை நடந்தது. இப்பொழுது லைட் வெயிட் சாம்பியன்களுக்குள் சண்டை நடைபெறும்."
சாமா..


மாட்ச் பார்க்கணும் கையில் பைசாகூட இல்லையே!...
கிரிக்கெட் மாட்ச்
கிரிக்கெட் மாட்ச்



அரசினர் உயர்நிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்புப் படிக்கிறான் கோபாலன். நல்ல சுறுசுறுப்பான மாணவன். எப்பொழுதும் படித்துக் கொண்டே யிருப்பான். அவன் பாடப் புத்தகங்கள் படித்த நேரம் போக, மீதி நேரங்களில் வேறு புத்தகங்களைப் படிப்பான். அதற்காக அவன் தன் வீடு இருக்கும் தெரு முனையில் உள்ள கடைக்குப் போவான்.

இன்று சனிக் கிழமை. ஆகவே அவன் அந்தத் தெரு முனையிலுள்ள கடைக்கு வந்தான். அங்கு கிடந்த பலகையில் உட்கார்ந்து புத்தகங்களைப் படிக்கத் தொடங்கினான்.

அப்போது—

''எள்ளுருண்டையும் கமர்கட்டும் எவ்வளவுக்குப் போட?'' என்ற குரல் கேட்டது.

கோபாலன் நிமிர்ந்து பார்த்தான். பள்ளிக்குப் போக வேண்டிய ஏழு வயதுச் சிறுமி ஒருத்தி கடைக்காரரிடம் அந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டு நின்று கொண்டிருந்தாள்.

கடைக்காரர் அவளிடம், ''சாரதா! மூணு ரூபாய்க்கு எள்ளுருண்டை போடு. இரண்டு ரூபாய்க்குக் கமர்க்கட்டு போடு. நாளைக்குத்தான் காசு. சரிதானே?'' என்றார்.

சிறுமி சாரதா, ''சரிங்க ஐயா!'' என்றவள் கைப்பையிலிருந்து ஐந்து ரூபாய்க்கு எள்ளுருண்டையும் கமர் கட்டும் எண்ணி எடுத்துக் கொடுத்தாள். பிறகு ''நான் வரேன்!'' என்று சொல்லி விட்டுச் சென்றாள்.

அந்தச் சமயத்தில் கடைக்காரர், ''தம்பி! இந்தப் பெண் சாரதா இருக்கே, அது ஏழைதான். ஆனால் நாணயம் தவறாதது!'' என்று சாரதாவைப் பாராட்டினார்.

மாலை நான்கு மணிக்குமேல் ஆகி விட்டதால் கோபாலன் கடைக்காரரிடம் விடைபெற்று வீட்டுக்கு நடந்தான்.

மறுநாள் மதியம். கோபாலனின் அம்மா தமயந்தி அவனை அழைத்து, ''கோபால்! கடைக்குப் போய் ஒரு லிட்டர் உளுத்தம் பருப்பு வாங்கி வா. இந்தா பணம்'' என்று கூறி அவனிடம் ஓர் ஐந்து ரூபாய்த் தாளையும் பையையும் கொடுத்தாள்.

''சரியம்மா!'' என்றவன், பணத்தையும் பையையும் வாங்கிக் கொண்டு கடை வீதிக்குச் சென்றான். போகும் போதே பணத்தைக் கால் சட்டைப் பையில் பத்திரப்படுத்தி , வைத்துக் கொண்டான்.

கோபாலன் நேரே மளிகை ஸ்டோருக்கு வந்தான். ''ஒரு லிட்டர் உளுத்தம்பருப்பு வேணும்!'' என்று சொல்லி விட்டுப் பணத்தை எடுக்கப் பைக்குள் கையை விட்டான். அடுத்த கணம் தேள் கொட்டியது போல் அவன் துடித்துப் போனான். ஆமாம். அவன் பைக்குள் வைத்திருந்த பணத்தைக் காணவில்லை!

திரும்பவும் அவன் பைக்குள் கையை விட்டு நன்றாகத் துழாவினான். பைக்குள் எலி கடித்த பெரும் ஓட்டைதான் இருந்தது!


ஓட்டைப் பை என்று தெரியாமல் அம்மா கொடுத்த பணத்தை அந்தப் பைக்குள் வைத்துக் கொண்டு விட்டான். வழியில் அந்த ஓட்டை வழியாகப் பணம் எங்கோ விழுந்து விட்டது!

உண்மையைக் கூறினால் அம்மா எப்படிக் கோபிப்பாள் என்பதை எண்ணியதும் கூ.ங்கிப்போனான்.

ஆமாம், தமயந்தி தன் மகனை வளர்ப்பதில் பாசத்தை மட்டும் காட்டவில்லை. கண்டிப்பையும் காட்டியிருந்தாள்.

கோபாலனுக்கு அதற்குமேல் என்ன செய்வது என்று புரியவில்லை.

ஒன்றும் புரியாத நிலையில் தனது தெரு முனையிலிருந்த பத்திரிகைக் கடைக்கு வந்து சேர்ந்தான்.



ஞான. வைத்தியநாதன்

அப்போது அந்தக் கடைக்காரர், கடையை விட்டு இறங்கி அவனை நோக்கி ஓடி வந்து, ''தம்பி! என் குழந்தைக்கு ஏதோ அடிபட்டுடுச்சாம். இப்பத்தான் ஆள் வந்தது. கொஞ்ச நேரம் கடையைப் பார்த்துக்க. நான் வரேன்!'' என்றவர், சிறிது தூரத்தில் சாரதா வருவதைக் கண்டதும், ''தம்பி! அதோ சாரதா வருது. அதுக்கு அஞ்சு ரூபா கொடுத்துடு!'' என்று அந்த அவசரத்திலும் சொல்லிவிட்டு அவனுடைய பதிலுக்குக் கூடக் காத்திராமல் வேகமாக நடையைக் கட்டினார்.

கோபாலன் அந்தக் கடைக்குப் போய், கடைக்காரர் உட்காரும் இடத்தில் உட்கார்ந்தான். அப்பொழுது சட்டென்று அவனுக்கு ஓர் எண்ணம் உதித்தது. கல்லாப் பெட்டியைத் திறந்தான். அதனுள் சில ஐந்து ரூபாய்த் தாள்களும், இரண்டும் ஒற்றையுமாகச் சில ரூபாய்த் தாள்களும் இருந்தன. கிண்ணங்களில் சில்லறை நாணயங்கள் வேறு இருந்தன.

கோபாலன் ஒரு ஐந்து ரூபாய்த் தாளை எடுத்துக் கைப் பைக்குள் வைத்துக் கொண்டான். பிறகு அவன் நிமிர்ந்து பார்த்தபோது, சாரதா, கடை முன் நின்று கொண்டிருந்தாள். அவளைக் கண்டதும் ஒரு விநாடி கோபாலன் மிரண்டு போனான். இருந்தாலும் சமாளித்துக் கொண்டு, ''சாரதா, உனக்குக் கடைக்காரர் ஐந்து ரூபாய் கொடுக்கச் சொன்னார்!'' என்று கூறி, கல்லாப் பெட்டியிலிருந்து ஐந்து ரூபாய் எடுத்து அவளிடம் நீட்டினான்.

சாரதா அந்தப் பணத்தை வாங்காமல் ''சில்லறையாகக் கொடு!'' என்றாள்.

''சரி!'' என்ற கோபாலன் எடுத்த ஐந்து ரூபாய்த் தாளைப் பெட்டியில் வைத்துவிட்டு ஐந்து ரூபாய்க்குச் சில்லறையாக எடுத்து அவளிடம் கொடுத்தான்.

சாரதா அந்தச் சில்லறையை வாங்கி எண்ணினாள். ஆறு ரூபாய் இருந்தது. உடனே அவள் கோபாலனிடம் ஒரு ரூபாய்ச் சில்லறையை எடுத்துக் கொடுத்து, ''மறதியா ஒரு ரூபாய் கூடக் கொடுத்திட்டியே, இந்தா!'' என்றாள்.

கோபாலன் பதற்றத்தில், தான் செய்த தவறைப் புரிந்து கொண்டான். அதே சமயம் அவளுடைய நாணயமான குணம் அவன் நெஞ்சைச் சுட்டது. அந்த வேதனையோடு அவள் கொடுத்த சில்லறையை வாங்கிக் கல்லாப் பெட்டியில் போட்டான்.

அப்போது அவள், ''உழைக்காமல் வந்த காசு தங்காது. உழைத்த காசுதான் நமக்குத் தங்கும். இப்படி எங்கம்மா எனக்கு அடிக்கடி சொல்லுவாங்க!'' என்று மேலும் சொன்னவள், ''ம்... நான் வரேன்!'' என்று சொல்லிவிட்டுச் சென்றாள்.

கோபாலன், சாரதா சொன்னதைக் கேட்டு ஒரு விநாடி கலங்கி நின்றான். மறு விநாடி தன் தவற்றை உணர்ந்து, கைப்பையிலிருந்த அந்த ஐந்து ரூபாய்த் தாளை எடுத்துத் திரும்பவும் கல்லாப் பெட்டியில் வைத்துவிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தான். அவன் உள்ளம் இப்போது சுமை நீங்கி இலேசாகியது.



மாணிக்கக்கல்

-தராஜா-

கலிகாலம் தொடங்கிய புதிதில் நடந்த கதை இது.

உஜ்ஜயினியில் தேவ சர்மா என்ற ஒருவர் இருந்தார். வேதம், சாஸ்திரம், இதிகாசம், புராணம் எல்லாவற்றையும் கற்றுக் கரைதேர்ந்தவர். ஆனால் அதிர்ஷ்டம் என்பது சிறிதும் இல்லாதவர். அவரை நாடிப் பலரும் வந்து கல்வி கற்றுச் சென்றார்களே தவிர, அவர்களால் இவருக்குப் பொருள் வருவாய் அதிகம் கிடைக்கவில்லை. தேவ சர்மாவுக்கு மூதாதையர்கள் சேர்த்து வைத்திருந்த நிலபுலன்கள் கொஞ்சம் இருந்தன. அவற்றிலிருந்து கிடைத்த வருமானத்தைக் கொண்டு ஏதோ காலம் தள்ளி வந்தார்.

ஓர் ஆண்டு நாடெங்கும் வறட்சி ஏற்பட்டது. பயிர்களெல்லாம் கருகிப் போயின. தேவ சர்மாவுக்கு ஒரு நெல் மணிகூடத் தேறவில்லை. என்ன செய்வதென்றே புரியவில்லை அவருக்கு. வீட்டிலோ வறுமை தாண்டவமாடியது. குழந்தைகள் பசியால் அலறித் துடித்தன. அதைப் பார்த்த தேவ சர்மாவுக்கு வாழ்க்கையின் மீதே விரக்தி ஏற்பட்டது. விடுவிடென்று எழுந்தார். வீட்டை விட்டு வெளியேறி, ஊருக்கு வெளியே இருந்த காட்டுக்குச் சென்றார்.

அங்கே ஓர் இடத்தில் பாம்புப் புற்றுகள் மண்டிக் கிடந்தன. தற்கொலை செய்து கொள்ளும் நோக்கத்துடன் ஒரு புற்றுக்குள் கையை விட்டார்.

அந்தப் புற்றில் நீண்ட காலமாக நாகப் பாம்பு ஒன்று குடியிருந்து வந்தது. பாம்புகள் ஆயுள் முதிர்ச்சியடைந்தால் அவற்றின் தலைப்புறத்தில் மாணிக்கக் கல் தோன்றும். இந்தப் பாம்புக்கும் மாணிக்கக் கல் ஒன்று தோன்றியிருந்தது. தேவ சர்மா புற்றுக்குள் கைவிட்ட வேளையில், அந்தக் கல்லை வைத்துவிட்டுப் பாம்பு இரை தேடப் போயிருந்தது. எனவே, தேவ சர்மா கையில் அந்த மாணிக்கக் கல் அகப்பட்டது.

தேவ சர்மாவுக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி. மரணத்தைத் தழுவ நினைத்தவருக்கு மாணிக்கம் கிடைத்தால் மகிழ்ச்சிக்குக் கேட்பானேன்? ஊர் திரும்பியவர், நேராக ரத்தின வியாபாரி ஒருவனிடம் சென்றார். கல்லைக் கொடுத்தார். அதற்கு என்ன மதிப்போ, அதற்குப் பொற்காசுகளாகக் கொடுக்கும்படி கேட்டார்.

ரத்தின வியாபாரி, "இன்னும் மூன்று நாழிகை கழித்து வாருங்கள். மதிப்புப் போட்டு வைத்திருக்கிறேன்" என்றான். அவன் பேச்சை நம்பியவராகத் தேவசர்மா வீடு திரும்பினார்.

குறிப்பிட்ட காலம் கடந்த பின்னர் தேவ சர்மா வியாபாரியிடம் சென்று, "மாணிக்கக் கல்லை மதிப்புப் போட்டு விட்டீர்களா? அது எவ்வளவு பெறும், சொல்லுங்கள்!" என்று கேட்டார்.

"கல்லா? ஏது கல்?" என்றான் வைர வியாபாரி.

"நான் கொடுத்தேனே உம்மிடம் மூன்று நாழிகை முன்பு?"

"ஓகோ! இதுவும் ஒரு சாமர்த்தியமோ? ஒன்றும் கொடுக்காமலே இப்படி வந்து கேட்டால் நான் ஏமாந்து போய் உம்மிடம் ஒரு மாணிக்கக் கல்லை எடுத்துக் கொடுத்து விடுவேன் என்று நினைத்தீரோ? நீர் என்னிடம் கல்லும் கொடுக்கவில்லை, நெல்லும் கொடுக்கவில்லை... போய்விடும்!" என்றான்.

தாம் ஏமாந்து விட்டது புரிந்தது தேவ சர்மாவுக்கு. ஆனால் வியாபாரியை அத்துடன் எப்படி விட்டு விடுவது? எனவே, அவனை நியாய ஸ்தலத்துக்கு அழைத்தார். அவனும் வந்தான்.

"இந்த ஆசாமி பொய் சொல்கிறார். அவர் என்னிடம் கல் எதுவும் கொடுக்கவில்லை. அப்படி அவர் கொடுத்தது உண்மையானால் அவரது மூத்த பிள்ளையைப் போட்டுத் தாண்டிச் சத்தியம் பண்ணச் சொல்லுங்கள், பார்ப்போம்!" என்றான் வியாபாரி.

தேவ சர்மா இதற்குச் சம்மதித்தார். அதன்படியே தமது மூத்த பிள்ளையைப் படுக்க வைத்து, "நான் சொல்வது சத்தியம்!" என்று கூறித் தாண்டினார்.

என்ன துரதிர்ஷ்டம்! அந்தப் பிள்ளை உடனே இறந்து போய் விட்டான்.

தேவசர்மா பொய்ச் சத்தியம் செய்திருக்கிறார் என்று எல்லோரும் அவரை நிந்திக்கத் தொடங்கினார்கள்.

துக்கமான துக்கம் வந்து சூழ்ந்து கொண்டது தேவ சர்மாவை. இறந்த பிள்ளையைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு வீடு நோக்கிப் புறப்பட்டார்.


பாதி வழியில் எதிர்ப்பட்டார் ஒரு கிழவர். அவர் வேறு யாருமல்ல; கலிபுருஷன்தான். தேவ சர்மா புலம்பிக் கொண்டே வந்ததைப் பார்த்ததும் அவரை நிறுத்தி விஷயம் என்னவென்று விசாரித்தார் கலிபுருஷன். நடந்த கதையைத் தேவ சர்மா சொன்னதும், ''அட அப்பாவி மனிதரே! இப்போது பிறந்திருப்பது கலியுகம் ஐயா! உண்மையை உள்ளபடியே சொன்னால் கூட இந்த யுகத்தில் உலகம் அதை ஏற்காது. பொய்க்குத்தான் இந்த யுகத்தில் மதிப்பு அதிகம். ஆகவே நீர் மறுபடியும் நியாயஸ்தலத்துக்குச் சென்று, 'நான் வியாபாரியிடம் கொடுத்தது ஒரு மாணிக்கக் கல் அல்ல; இரண்டு!' என்று கூறிப் பிள்ளையைப் போட்டு மறுபடியும் தாண்டும். மீதியை நான் பார்த்துக் கொள்கிறேன்!'' என்று வழி சொல்லிக் கொடுத்தார்.

அதன்படியே தேவ சர்மா மீண்டும் நியாய ஸ்தலத்துக்கு விரைந்தார். கலிபுருஷன் சொல்லிக் கொடுத்திருந்தபடியே கூறி, இறந்து போயிருந்த பிள்ளையைப் போட்டுத் தாண்டினார். கூடியிருந்தவர்கள் அத்தனை பேரும் ஆச்சரியப்படும் வகையில் செத்துப் போன பிள்ளை உயிர் பிழைத்து எழுந்து நின்றான்!

நியாயாதிபதி ரத்தின வியாபாரியைக் கடுமையாகக் கண்டித்து இரண்டு மாணிக்கக் கற்களுக்கான விலையை உடனே தேவ சர்மாவுக்குக் கொடுக்கும்படியாக உத்தரவிட்டார். அத்துடன் வியாபாரி பொய் சொன்ன குற்றத்துக்காக ஆயிரம் வராகன் அபராதம் செலுத்த வேண்டும் என்றும், அந்தத் தொகையும் தேவ சர்மாவுக்கே போய்ச் சேர வேண்டும் என்றும் கட்டளையிட்டார்.

தேவ சர்மாவுக்கு ஆயுட் காலம் முழுதும் வறுமை நீங்கும் அளவுக்குச் செல்வம் கிடைத்து விட்டது, கலிபுருஷனின் தயவால்!





ஒரு வாரமாக அம்மாவுக்கு உடல் நலமில்லை.

வீட்டு வேலைகளை முன்போல் அவளால் கவனிக்க இயலவில்லை.

ஓர் அறையில் படுக்கையில் முடங்கி விட்டாள் அவள். காலையில் வந்து சமைத்த வேலைக்காரப் பெண்மணியும் வரவில்லை.

ரமணிக்கும் ரமேஷுக்கும் பசி வயிற்றைக் கிள்ளியது. அவர்களுக்கு இதுவரை பசித்த நேரத்தில் உணவு கிடைத்து வந்தது. அவர்களுக்கு நேரத்தில் சாப்பிட்டுத்தான் பழக்கம். சமையல் அறைப் பக்கம்கூட எப்போதாவதுதான் எட்டிப் பார்ப்பார்கள். அம்மா ஏதாவது தின்பண்டம் செய்யும்போது!

இருவருக்கும் பசி அதிகமாகி விட்டதால் சமையலறையில் நுழைந்தார்கள்.



ஆளுக்கு ஒரு தட்டை எடுத்துக்கொண்டார்கள். அவர்களே சாதத்தை எடுத்துத் தட்டில் போட்டுக் கொண்டார்கள். சாம்பாரை ஊற்றிக் கொண்டார்கள். அவசரம் அவசரமாகக் கீழே உட்கார்ந்து சாப்பிடத் தொடங்கினார்கள்.

சாப்பிட்டு முடிந்ததும் தட்டிலேயே கையைக் கழுவினார்கள்.

ரமணி மூத்தவன். அவன் ரமேஷைப் பார்த்தான்.

''டேய் ரமேஷ்! என் தட்டையும் உன் தட்டையும் கழுவிவிடு!'' என்றான்.

''நான் ஏன் கழுவணும்? என் தட்டையும் வேண்டுமானால் நீயே சேர்த்துக் கழுவு. என்னை தட்டுக் கழுவுகிறவன் என்று நினைத்தாயோ?'' பெரிய அநீதி தனக்கு இழைக்கப்பட்டதைப் போல் குமுறினான் அவன்.

''நான் மட்டும் தட்டுக் கழுவுகிறவனா? அப்பா டிபுடிகலெக்டர். கலெக்டர் வீட்டுப் பிள்ளை... அதிலும் பெரியவன். நானா தட்டுக் கழுவுவேன்? நீ சின்னவன்தானே? இரண்டு தட்டுக்களையும் நீயே கழுவினால் என்ன?'' ரமணி கேட்டான்.

''நானும்தான் கலெக்டர் வீட்டுப் பையன். நான் மட்டும் ஏன் கழுவ வேண்டும்? என் தட்டையே நான் கழுவ மாட்டேன். இதில் உன் தட்டையும் சேர்த்துக் கழுவ எனக்கென்ன பைத்தியமா?'' என்றான் ரமேஷ்.

இப்படி விவாதம் நடத்திக்கொண்டு சமையல் அறையை விட்டு வெளியே வந்து குழாயடியில் மறுபடி கைகால்களைக் கழுவிக் கொண்டு கூடத்துக்குப் போய்விட்டார்கள். இரண்டு பேருமே தட்டைக் கழுவவில்லை.

வாசலில் கார் வரும் ஒலி கேட்டது. அப்பா வந்து விட்டார். 'டக் டக்' என்று மிடுக்கோடு நடந்து கூடத்துக்கு வந்து விட்டார்.

அப்பா வந்ததும் கோட்டு, டை, 'ஷூ'க்களைக் கழற்றி விடுவது அம்மா தான். அந்த வேலையை மகிழ்ச்சியோடு செய்வது அம்மாவின் வழக்கம். இன்றுதான் அம்மா படுக்கையில் இருக்கிறாளே, அப்பாவே கோட்டையும் 'ஷூ'வையும் கழற்றிக் கொண்டார் 'டை'யை அவிழ்த்து உரிய இடத்தில் வைத்தார். உடைகளை மாற்றிக்கொண்டார்.

ரமேஷும் ரமணியும் ஒருவருக்கொருவர் முகத்தைப் பார்த்துக்கொண்டார்கள். பின் தங்கள் படிப்பில் கவனம் செலுத்துவது போல ஒரு புத்தகத்தை எடுத்து முகத்துக்கு நேரே வைத்துக் கொண்டு பாசாங்கு செய்து கொண்டிருந்தார்கள். இடையிடையே தந்தையையும் கவனித்துக் கொண் டிருந்தார்கள்.

''டேய் ரமணி...ரமேஷ்! என்னடா இது?. இன்றைக்கு ரொம்பப் பதவிசாகச் சத்தம் போடாமல் இருக்கிறீர்கள்? இதைக் கொண்டுபோய்ச் சாப்பிடுங்கள்'' என்று பழங்களும் பிஸ்கட்டுகளும், கொடுத்தார். அமைதியாக வந்து வாங்கிக் கொண்டு அவரவர் இடத்துக்குப் போய் அமர்ந்தார்கள்.

அம்மா படுத்திருந்த அறைக்குச் சென்றார் அப்பா.

''லட்சுமி, உடம்பு இப்போது எப்படி இருக்கிறது?... டாக்டர் கொடுத்த மருந்தை மறக்காமல் சாப்பிட்டாயா?'' என்று கேட்டார்.

''வெந்நீர் வேணுங்க, இந்த வேளைக்கு மாத்திரை சாப்பிட.''

உடனே சமையலறைக்குப் போனார் அவர். வழியில் இரண்டு தட்டுக்கள் கழுவப்படாமல் அப்படியே கிடப்பதையும் பார்த்தார். தன் அலுவலகத்திலும் பிற இடங்களிலும் சுத்தத்தின் அவசியத்தை விளக்கும் அவருக்கு இந்தக் காட்சி மனக் கஷ்டத்தை உண்டாக்கியிருக்க வேண்டும். ஆனால் அவர் சத்தம் எதுவும் போடவில்லை.

ஸ்டவ்வைப் பற்றவைத்து உடனே வெந்நீர் போட்டு வந்து லட்சுமிக்குக் கொடுத்தார்.


தந்தையைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள் ரமணியும் ரமேஷும் — படித்துக்கொண்டே.


அம்மா மருந்து சாப்பிட்டு முடிந்ததும் அப்பா மீண்டும் சமையலறைக்குப் போய் அந்த இரண்டு தட்டுக்களையும் எடுத்துக் கொண்டு வெளியே வந்து அந்த அறைக்குப் பக்கத்தில் இருந்த குழாய்க்குச் சென்றார்; அவற்றைச் சுத்தமாகக் கழுவினார். பின் உள்ளே சென்று தட்டுக்களை வைக்கும் இடத்தில் வைத்தார்.

தட்டுக்களை அவர் பொறுமையாகக் குனிந்து கழுவும்போது பார்த்த ரமணிக்கும் ரமேஷுக்கும் அந்தக் காட்சி வியப்பாகவும் திகைப்பாகவும் இருந்தது.

'அப்பா எவ்வளவு பெரிய ஆபீசர். ஒரு டிபுடி கலெக்டர். எவ்வளவு படித்தவர்! அவரைவிட நாம் எந்த விதத்திலும் உயர்ந்தவர்கள் இல்லை. 'நான் எவ்வளவு பெரியவன்? நானா தட்டைக் கழுவுவேன்?' என்று அவர் முழங்கவில்லை, அதிலும் நாம் சாப்பிட்ட தட்டை அவர் எடுத்துச் சென்று கழுவுகிறார். அப்படியானால் செய்யும் எந்தத் தொழிலும் வேலையும் கேவலமோ இழுக்கோ இல்லை. ஒருவருக்கொருவர் ஒத்துழைத்து உதவி புரிந்து வாழ்வதுதான் சிறந்தது' என்ற நல்ல புத்தி அவர்கள் இருவருக்கும் வந்தது.




23
கதை: வாண்டுமாமா
சித்திரம்: செல்லம்
மறுநாள் இரவு போலீசால் தேடப்பட்டுவந்த மந்துவின் நண்பன் அதை நகரின் ஒரு தெருமுனைக்கு அழைத்து வருகிறான்.
நண்பா, என்னுடைய ஒரே நம்பிக்கை நீதான். அதோ போகிறான் பார், ஒரு ஆள். அவனை நன்றாகப் பார்த்துக் கொள். எனக்குத் திருட்டுப் பட்டம் கட்டிய அயோக்கியன் அவன் தான். உண்மையில் திருடன் அவனே. இப்போதும் அதோ அந்த வீட்டில் தன் கை வரிசையைக் காட்டவே போகிறான். இந்த ஊதலை வைத்துக் கொள். அவன் அந்த வீட்டிலிருந்து கொள்ளையடித்து வெளி வரும்போது இதைப் பலமாக ஊது. போலீஸ் அவனை கையும் களவுமாகப் பிடிக்கும். நான் நிரபராதி என்பதை நிரூபிக்க ஒரு பிடிமானம் ஏற்படும். நான் சொன்ன படி செய்வாயா?
என் திறமையில் என் நண்பனுக்கு இன்னமும் நம்பிக்கை வர வில்லையே! ம்... இதோ இந்தத் தார் பக்கெட்டை இங்கு கவிழ்த்து வைக்கிறேன். அந்தத் திருடன் இந்த ஜன்னல் வழியாகக் குதிக்கும் போது....
ஆனால் மந்துவின் திட்டம் மட்டமாகி விடுகிறது. பலே திருடன் தார் மீது குதிக்காமல் தாண்டிக் குதித்து விடுகிறான். மந்துவோ முறைப்படி ஊதலை ஊதித் தன் நண்பனை அழைக்கிறது.
திருடனைப் பிடிக்க வந்த மந்துவின் நண்பன் மந்து பரப்பி இருந்த தாரில் கால் வைக்க...
அட, ஆண்டவா! யாரைப் பிடிக்க அது இந்தப் பொறியை வைத்ததோ அதில் நானே சிக்கிக் கொண்டேனே.
மந்துவின் ஊதல் ஒலி போலீஸை வரவழைத்து விடுகிறது.
ஐயோ, நான் ஊற்றிய தாரில் என் நண்பனே யல்லவா சிக்கிக் கொண்டுவிட் டான்.
ஆனாலும் மந்து நம்பிக்கையை இழக்கவில்லை. வீட்டின் மேலாக ஓடி, அங்கு குதிரை மூலம் தப்ப முயன்ற திருடன் மீது....
பயலே அவ்வளவு சுலபமாக நீ தப்பிவிட முடியாது. உன்னைப் போலீஸில் ஒப்ப டைத்து என் நண்பனை விடுதலை செய்யும் வரை நான் ஓய மாட்டேன்.



நீ குதிரையை விரட்டிக் கொண்டு ஓடி விட முடியாதுப்பேன்! உன் கைகட்டிய கயிற்றை இங்கே கம்பத்திலே
ஐயோ! இவனுக்கிட்ட அந்த 'டுமீல் டுமீல்' இருக்கும்போது நான் என்ன செய்வேன்.
இந்தப் பெரிய பீப்பாயை உருட்டித் தள்ளி...
ஆ! இந்தக் கால் சராய்க்குள்ளே நீ எல்லாப் பூட்டுகளையும் - திறக்கும் சாவிக் கொத்தை வச்சிருப்பே! எனக்கும் இப்போ இது தான் வேணும்.
நண்பனே இதோ அந்தத் திருடனின் கால் சராய். இதுக்குள்ளே நீ சொன்ன அந்தச் சாவிக் கொத்து இருக்கா பாரு.
சபாஷ்! இதோ சாவிக்கொத்து. என் விடுதலைக்கு வேண்டிய உபகரணமும் இதுதான்!
...ஓடி வா... இனி இப்படி ஓடி ஒளிந்து வாழ முடியாது. நான் நிரபராதி என்பதை எப்படியும் நிரூபித்து விடுதலை பெற்று நிம்மதியாக வாழணும்.
அதுக்கு என்னாலே ஏதாவது உதவ முடியுமானா சந்தோஷமாச் செய்வேன்.



பிரேஸில் நாட்டுக் கதை

யாரா

கிருஷ்ணவேணி

உஷ்ணப் பிரதேசத்து அடர்ந்த காட்டின் நடுவே ஓடியது அந்தப் பெரிய ஆறு. பகலிலெல்லாம் வெய்யிலின் உக்ரம் தாங்க முடியாததாக இருக்கும். நண்பகலின் அந்த வெம்மையைத் தாங்க முடியாதது போல் அடர்ந்த அந்தக் கானகம்கூட அமைதியாகத் தூங்கும். அதிகாலை வேளையிலும் மாலை மயங்கும் நேரத்திலும்தான் அந்தக் கானகம் கலகலப்பாக இருக்கும். இப்படிப்பட்ட நாட்டில்தான் அந்த இளைஞனும், யுவதியும் வாழ்ந்து வந்தார்கள்.

அவள் பெயர் ஜூலியா. அவன் பெயர் அலான்ஸோ. ஜூலியா நினைவு தெரிந்த நாள் முதல் அங்குதான் வசித்து வருகிறாள். அந்தப் பகுதியைச் சேர்ந்தவள் அவள். ஆனால் அலான்ஸோ வேறு இடத்திலிருந்து அங்கு வந்தவன். அந்தக் கானகத்தின் பயங்கரங்களைப் பற்றி ஏதும் அறியாதவன்.

அந்த நதிக் கரைப் பகுதியில் பிரபலமான ஒரு திருவிழா நடக்கும். அதைக் காணச் சுற்று வட்டாரப் பகுதிகளிலிருந்தெல்லாம் மக்கள் வந்து கூடுவார்கள். அப்படி அந்தத் திருவிழாவைக் காண வந்தவன்தான் அலான்ஸோ. சிவப்பும் நீலமுமான அழகிய ஆடைகள் அணிந்து, கருங் கூந்தலில் வெள்ளை ரோஜா மலர்களைச் சூடிக் கொண்டு நடனமாடிக் களிப்பூட்டிய பெண்களைப் பார்த்துக் கொண்டிருந்தான் அலான்ஸோ. சட்டென்று அத்தனை கூட்டத்திலும் அவள், அந்த அழகி, தனித்து விளங்கினாள். வெள்ளை ஆடை அணிந்து சிவப்பு மலர் சூடி இருந்தது மட்டுமே மற்றவர்களிடமிருந்து அவளைப் பிரித்துக் காட்டவில்லை. நடனமாடிய நங்கையர்களையெல்லாம் விட அவள் வனப்பு மிக்கவளாகவும் இருந்தாள்.

விழா முடிந்து, அதன் கோலாகலமெல்லாம் அடங்கிய பிறகும் கூட அலான்ஸோவினால் அவளை மறக்க முடியவில்லை. மறுபடியும் அவளைக் காண மாட்டோமா என்று ஏங்கினான். இரவிலே தூக்கம் வரவில்லை. ஆகவே காள



கத்தினுள்ளே சென்று பெரிய நதியின் குளிர்ந்த மடுவிலே போய்த் துளைந்து குளித்து விட்டு வருவான். என்ன செய்தாலும் ஜூலியாவே அவன் எண்ணமெல்லாம் நிறைந்திருந்தாள். அந்த அழகிய முகம் மனக் கண் முன்னால் வந்து வந்து மயக்கிற்று.

எப்படியும் அவள் இருப்பிடம் அறிந்து அவளைச் சந்திப்பதென்ற முடிவோடு கிளம்பினான். அதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும். ஒரு வெறி நாய் ஒரு பெண்ணைத் துரத்திக் கொண்டிருந்தது. அதை விரட்டி அவளைக் காப்பாற்றினான். என்ன ஆச்சரியம்! அவன் யாரைத் தேடிக் கிளம்பினானோ, அதே அழகிதான் அவள்! அவன் மகிழ்ச்சி எப்படி இருக்கும்? இதன் பிறகு அவள் வீட்டில் அவனை விரும்பி வரவேற்றார்கள். அடிக்கடி ஜூலியாவைக் காணப் போகலானான். இருவரையும் கணவன் மனைவியாக்கிவிட அவள் வீட்டாரும் நிச்சயித்தார்கள்.



அலான்ஸோ தன் அலுவல் முடிந்ததும் தினமும் கானகத்தின் ஓரமாக ஜூலியாவின் வீட்டை நோக்கி வருவான். அப்போது நெடுதுயர்ந்த மரங்களில் படர்ந்துள்ள காட்டுக் கொடிகளில் அமர்ந்து ஊஞ்சலாடியபடி பஞ்சவர்ணக் கிளிகள் அவனைப் பார்த்துக் கிரீச்சிட்டுச் சிரிக்கும். ஜூலியாவுடன் கைகோத்துக் கொண்டு கறுப்பு வெல்வெட் போன்ற மேகத்திலே வைரங்களாக மிடுக்கிடும் நட்சத்திரங்களின் கீழாக வெகுநேரம் வரை உலாவுவார்கள். இளங் காதலர்களின் அந்த இன்பத்துக்கு இணையாக வேறு எதையுமே கூற முடியாது.

ஒரு நாள் அலான்ஸோவிடம் வழக்கமான மகிழ்ச்சியில்லை. காதலனின் சோர்வைக் கண்ட ஜூலி காரணம் கேட்டாள்.

'' இரவிலே தாங்க முடியாத புழுக்கத்தினால் எனக்குத் தூக்கம் வராது. ஆகவே வழக்கமாக நான் தூங்கப் போகுமுன் கானகத்தினுள்ளே சென்று அங்குள்ள ஆழமான அந்த மடுவிலே நீந்திக் குளித்துவிட்டு வருவேன். இங்கு வந்த நாளிலிருந்து நான் இதை வழக்கமாகக் கொண்டிருக்கிறேன். ஆனால் நேற்றிரவு ஓர் அதிசயம் நிகழ்ந்தது. நான் குளித்துவிட்டுக் கரை ஏறும்போது இனிமையான ஒரு கானம் என்னைக் கவர்ந்தது. அத்தனை மதுரமான குரலை நான் அதுவரை கேட்டதே இல்லை. ஆனால் பாட்டின் பொருள் விளங்கவே இல்லை. நான் என் உடைகளை அணிந்து கொண்டு அந்த இனிய குரலுக்கு உரியவளை நதிக் கரை முழுவதும் தேடினேன். ஆனால் சுற்று வட்டாரத்தில் யாரையுமே காணவில்லை. அந்தக் குரலும் நினைவும் என் நெஞ்சைவிட்டு நீங்கவே இல்லை'' என்றான் அலான்ஸோ.

இதைக் கேட்ட ஜூலியாவின் உடல் நடுங்கிற்று. முகம் வெளுத்துப் பீதி அடைந்தாள். அந்தப் பெரிய நதிக் கரையில் இருக்கும் அடர்ந்த கானகத்தையொட்டி வாழ்ந்து வரும் அவள் நதிக் கரைகளிலும் கானகத்தினுள்ளே இருக்கும் அந்த மடுவிலும் வாழும் ஆவிகளைப் பற்றி எவ்வளவோ கதைகளைக் கேட்டிருக்கிறாள். அவற்றில் யாராவும் ஒருத்தி. திருமணமாகப் போகும் நிலையிலுள்ள கட்டிளம் காளைகளை யாரா கவர்ந்திழுத்துச் தனக்குப்

டமியாக்கிக் கொள்ளுவாள் என்பதை யும் கேட்டிருக்கிறாள். யாரா ஒரு மோகினிப் பேய்.

'' அலான்ஸோ எனக்கு ஒரு வரம் அளிப்பீர்களா?'' என்று கேட்டாள் ஜூலியா.

''உனக்கு இல்லாமலா? வேண்டிய தைக் கேள்.''

''நம் வருங்கால வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்க வேண்டும் என்ப தற்காகவே உங்களை இந்த வரம் கேட் கிறேன்.''

''அப்படியானால் அது மிகவும் முக்கிய மான வரமாகத்தான் இருக்கும். நான் அவசியம் முடித்துக் கொடுப்பேன், ஜூலியா!''

'' அப்படியானால் கானகத்தின் நடு வில் உள்ள பெரிய நதியினால் ஏற்பட் டிருக்கும் அந்த ஆழமான மடுவுக்குப் போய் இனி மேல் குளிக்க மாட்டேன் என்று வாக்களியுங்கள்.'' கெஞ்சும் குரலில் கேட்டாள் ஜூலியா.

'' என் இதய மலரே ! நான் எத் தனையோ இரவுகள் அங்கு போய் ஆனந்தமாகக் குளித்து வந்திருக் கிறேன். எனக்கு எவ்விதத் தீங்கும் ஏற்பட்டதில்லை.''

'' இதுவரையில் இல்லாதிருக்கலாம். இனி ஏற்படலாம். உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன். இனி போவதில்லை என்று வாக்களியுங்கள்.''

'' எதற்காக இவ்வளவு கலங்கிப் போய்ப் பேசுகிறாய். உன் முகம் பீதியி னால் வெளிறிப் போயிருக்கிறதே !''

'' நீங்கள் இனியதொரு கானத் தைக் கேட்டீர்கள் இல்லையா ?''

''கேட்டேன்..... நல்ல குரல். அத னால் எவ்விதத் தீங்கும் ஏற்பட வழி யில்லை.''

'' நேற்று கானம் மட்டும் கேட் டீர்கள். அதன் பிறகு கானமிசைக்கும் கன்னி தோன்றுவாள். அவள் தன் னோடு மரணத்தையும் அழைத்து வரக் கூடியவள்.''

'' என் இதய ராணியே ! உனக்கு என்ன பைத்தியமா ? ஏன் இப்படி யெல்லாம் பேசுகிறாய் ?''

'' வேண்டாம், வேண்டாம்! நான் உண்மையைத்தான் கூறுகிறேன். நீங்கள் கேட்ட அந்த இனிய கானம் யாராவினுடையதேதான்.'' அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு கெகெத் தாள் ஜூலியா.

'' யாராவா ?'' என்று கேட்ட அலான்ஸோ பலமாகச் சிரித்தான். ஆனால் அவன் சிரிப்பு திடீரென்று கிறீச் சென்று விகாரமான ஒலியாக மாறியது.

'' ஐயோ! நீங்கள் யாராவைத்தான் பார்த்திருக்கிறீர்கள். அவளைக் கண்ட வர்கள்தான் இப்படி விகாரமாகச் சிரிப்பார்கள்'' என்று குழறியபடியே ஜூலியா நினைவிழந்து கீழே விழுந்தாள்.

ஜூலியாவுக்கு நினைவு திரும்பிய போது அவள் விரும்பும் எதையும் தான் தட்டாமல் செய்வதாக வாக் களிக்கத் தயாராக இருந்தான், அலான்ஸோ. ஆனால் அவனுக்கு யாரா விடம் நம்பிக்கை இல்லை. ''உன் விருப் பப்படியே நான் இனி அந்த மடுவில் போய்க் குளிக்கமாட்டேன்'' என்றான் தன் காதலியிடம்.

''அப்பாடா ! இப்போதுதான் என் நெஞ்சின் சுமை குறைந்தது. யாரா என்ற அந்த மோகினிப் பிசாசு மிக வும் சக்தி வாய்ந்தது. அதன் குரலின் இனிமைக்கு அடிமையாகாத ஆண்களே கிடையாது. இவ்வுலகில் எதையும் மறக்கச் செய்யும் ஆற்றல் படைத்தது அந்த ஆவி. எத்தனையோ கன்னிப் பெண்கள் தங்கள் காதலனை அவளிடம் பறி கொடுத்து மனமுடைந்து மாண் டிருக்கிறார்கள். அந்த மாயமோகினி யின் கானம் மறுபடியும் உங்களை மயக்கி மடுவுக்கு வருமாறு அழைக்கும். இதோ, இதை எப்போதும் உங்களுடனேயே வைத்துக் கொள்ளுங்கள்'' என்று கூறிய ஜூலியா தன் பேழையிலிருந்து விநோதமான வண்ணக் கோடுகளைக் கொண்ட ஒரு பெரிய கடல் கிளிஞ்சலை எடுத்தாள். அதைத் தன் இதழின் அருகே வைத்துக் கொண்டு இனிய தொரு பாடலைப் பாடினாள். அது அவள் இதயத்தின் அடியிலிருந்து வெளிப் பட்ட ஜீவனுள்ள பாடல். பிறகு அந்தக் கிளிஞ்சலை அலான்ஸோவிடம் கொடுத்தபடி, ''எப்போதும் இது உங்களிடம் இருக்கட்டும். யாரா மோகினியின் கானம் கேட்குமானால் இதை உங்கள் காதருகில் வைத்துக் கொள்ளுங்கள். அவள் பாடல் மறைந்து என் குரல் உங்கள் செவிகளில் ஒலிக்கும். என் நினைவும் உங்களுக்கு ஏற்படும். யாராவின் கானத்தை என் குரல் வெற்றி கொள்ளுமா என்பதை என்னால் கூற முடியாது. அது எனக்கு வாக் களித்த ஆண் மகனின் மன உறுதியைப் பொறுத்தது'' என்றாள் ஜூலியா.

காதலியிடம் விடைபெற்று வீடு திரும்பியபோது இரவு வெகு நேரமாகி விட்டது. நதியைப் பாலாக்கிக் கொண் டிருந்தது நிலவு. கானகத்திலிருந்து இதமான குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருந்தது. துளைந்து நீந்திக் குளிக்க 'வா வா' என்று அழைப்பது போல் இருந்தது அந்த அமைதியான

புது வருடமும் காலண்டரும்

✻ புது வருடம் பிறந்து விட்டது. காலண்டர் பித்து பிடித்தாகிவிட்டது. எத்தனை விதமான காலண்டர்கள்! அது சரி, நீங்களும்தான் காலண்டர் பார்க்கிறீர்களே, இதெல்லாம் தெரியுமா?

ஒரு வருடம் எந்தக் கிழமையில் ஆரம்பமாகிறதோ அதே கிழமையில் தான் முடிவடையும் — லீப் வருடங்களைத் தவிர.•

இருபத்தெட்டு வருடங்களுக்கு ஒரு முறை காலண்டர்கள் ஒரே மாதிரி இருக்கும்.

எந்த வருடமும் ஏப்ரல், ஜூலை மாதங்கள் ஒரே கிழமையிலும், செப்டம்பர், டிசம்பர் மாதங்கள் ஒரே கிழமையிலும் தொடங்கும்.

புது வருடத்தின் ஆரம்பம் ஜனவரி முதல் தேதி என்பது 1752லிருந்து தான் தொடங்கியது. —ரா. பாலாஜி

ஆழ்ந்த இரவு நேரம். ஆனால் அவன் நதிக்குக் குளிக்கப் போகவில்லை. ''என் இதய ராணியான ஜூலியாவின் மகிழ்ச்சிதான் எனக்குப் பெரிது'' என்று உறுதியோடு இருந்தான்.

மூன்றுவது நாள் இரவு கானகத்திலிருந்து வெளிப்பட்ட அந்த இனிய குரலின் கவர்ச்சிக்கு அவனால் அடிமையாகாது இருக்க முடியவில்லை. ஜூலியாவுக்கு அளித்த வாக்குறுதிகளை மறந்தான். புதர்களை விலக்கிக் கொண்டு வெறி பிடித்தவனைப் போல் மடுவை நோக்கி நடக்கலானான். மடுவின் அருகே வந்ததும் கவனமாகச் சுற்றும் முற்றும் பார்த்தான். ஏதோ ஒரு புதிய அனுபவம் போன்ற உணர்வு. யாராவைப் பற்றி அவனுக்கு நம்பிக்கைப்படாவிட்டாலும் தன் காதலி எச்சரித்தது நினைவுக்கு வந்தது.

மடுவில் இறங்கிக் குளிக்கத் தயாரானான். நீருக்குள் காலை வைக்கப் போகும் போது ஏதோ ஒன்று அவனைத் திரும்பிப் பார்க்கத் தூண்டியது. அப்போது அதே சமயத்தில் மரக் கிளைகளினூடே காட்டுக் கொடிகளின் வழியாகப் பிரகாசமான நிலவொளி ஓரிடத்தில் இறங்கியது. அந்த ஒளி அழகியதொரு பெண்ணை உருக் கொண்டது. அதன் உடலின் பாகங்களை நீண்டு வளர்ந்திருந்த புற்களும் குத்துச் செடிகளும் மறைத்துக் கொண்டிருந்தன. வைரங்கள் ஜ்வலிக்குமே பளீர் பளீர் என்று, அப்படி அந்த உடல் தகதகத்தது. என்ன அழகு, எப்படிப்பட்ட உடல், அழகுக் கொள்ளை!

அலான்ஸோவுக்கு உடல் வியர்த்தது. பீதி நெஞ்சைக் கவ்வியது. உடைகளைச் சுருட்டிக் கொண்டு ஓடினான், ஓடினான் — வெறி கொண்டவனைப்போல் வீட்டை நோக்கி ஓடினான். மறுநாள் காலை மடுவின் அருகே வந்து பார்த்தான். ஆனால் அங்கு எந்தவிதமான மாறுதலும் இல்லை. ஆள் நடமாட்டத்துக்கான அறிகுறிகள் ஏதும் இல்லை. ''என் புத்தி பேதலித்துத்தான் போயிற்று. ஜூலியா கூறிய கதைகளையெல்லாம் கேட்டதினால் ஏற்பட்ட கோளாறுதான் இதெல்லாம்'' என்று தனக்குத் தானே கூறியபடி வீடு திரும்பினான்.

அன்று முழுதும் அவனுக்குக் காய்ச்சல் வந்தது போலிருந்தது. எதிலுமே மனம் ஈடுபடவில்லை. வேலை செய்வது சிரமமாக இருந்தது. அன்று மாலை ஜூலியாவைக் காணச் சென்றான். ஆனால் முதல் நாள் இரவு தனக்கு ஏற்பட்ட அனுபவங்கள் எதையும் அவளிடம் கூறவில்லை.

''என் இதய ராணியே! நாளைக்கு உன்னிடம் எல்லாம் தெரிவிக்கிறேன்'' என்று தனக்குள் கூறிக் கொண்டே அவளிடம் அவசரமாக விடைபெற்றுக் கொண்டு வீட்டுக்கு வந்தான். இரட்டைக் குழல் துப்பாக்கியை எடுத்து அதில் தோட்டாக்களை நிரப்பி அதைத் தன் இடையில் செருகிக் கொண்டான். ஜூலியா அளித்த கிளிஞ்சல் இருக்கிறதா என்று தொட்டுப் பார்த்துக் கொண்டான். வேக வேகமாகக் கானகத்தினுள் புகுந்து நடந்தான், அந்த மடுவை நோக்கி. அவ்வப்போது எழும் இராப் பறவைகளின் கிசுகிசுப்பையும் வேங்கைச் சிறுத்தைகளின் உறுமல்களையும் தவிர காடு அமைதியாக இருந்தது. அலான்ஸோ மடுவை அடுத்திருந்த ஒரு மரத்தடியில் அமர்ந்து கொண்டான். திடீரென்று விநோதமானதோர் உணர்வு உடலெங்கும் புகுந்து பரவுவதை உணர்ந்தான். கானம், இசை — பாடல் — மெது மெதுவே இரகசியம் பேசுவது போலத் தொடங்கி விரைவில் பெரிதாகியது. அவன் நெஞ்சைப் பிசைவது போல மோகனமாக, ரம்மியமாக உருப் பெற்றது. காதினருகே கிசுகிசுத்தது. வா வா என்று அழைத்தது.

''யார் நீ...? என்னை ஏன் அழைக்கிறாய்?'' என்று கேட்டபடி எழுந்திருந்தான் அலான்ஸோ. யாருமில்லை. அவன் கண்களுக்கு எதுவுமே தெரியவில்லை. அவன் பார்வை இருள் சூழ்ந்த

நதியின் அந்த மடுப்பகுதியை ஆராய்ந்தது. எதுவுமே புலப்படவில்லை. சட்டென்று ஓர் ஒற்றை நட்சத்திரமோ அல்லது ஏதோ ஓர் ஒளிக் கீற்றோ அந்த இருண்ட மடுவின் மையப் பகுதியில் இறங்குவது போலிருந்தது. அந்த ஒளி வர வரப் பெரிதாகியது. நெருங்கி நெருங்கியும் வரலாயிற்று. இனம் தெரியாததொரு பீதி, பயம் அலான்ஸோவின் உடலில் நெளிந்து ஓடியது. அந்த மாயம், மந்திரம் அவனைச் செயலற்றவனாக்குவது போலிருந்தது.

மடுவின் இருண்ட நீர் இரண்டாகப் பிரிந்தது. அதன் நடுவிலிருந்து நிலவின் ஒளியே போல் ஓர் உருவம் வெளிப்பட்டது. எந்த உருவத்தைக் கண்டு முதல் நாள் இரவு பயந்து ஓடினானோ அதே அழகுப் பெண் உருவம். அற்புதமான எழில் மங்கை. இன்றும் அதே மாதிரி ஓட நினைத்தான், கைகளால் தன் பார்வையை மூடி மறைத்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணினான். ஆனால் அவனால் எதையுமே செய்ய முடியவில்லை. அவனை அறியாமலே விருப்பமின்றியே அவன் முன்னேறிக் கொண்டிருந்தான்.

தகதகக்கும் அந்தத் தங்க மேனியாள் அவனை நோக்கித் தன் வெண்மையான கையை நீட்டினாள். அவள் உதடுகள் அசைந்தன. கண்கள் ஜ்வலித்தன. ஆகா! இவள்தான் என்ன அழகு? சட்டென்று தன் தலையைக் குலுக்கிக் கொண்டான் அலான்ஸோ. காதலி ஜூலியா அந்த நினைவின்மேலாக வந்தாள். அவள் நினைவை அவள் உருவைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ள எண்ணினான். ஜூலியாவின் நினைவினால் சில விநாடிகளுக்கு அந்த மாயக் கவர்ச்சி விலகியது. அந்த வேளையில் தன்னைச் சூழ்ந்துள்ள அபாயமும் அவனுக்குப் புரிந்தது. 'வீல்' என்று கத்தியபடி தன் இடையில் செருகியிருந்த துப்பாக்கியை எடுத்தான். எதிரிலே இருள் நடுவிலே ஒளியாகக் குலுங்கியவாறு தளுக்கி மினுக்கி நிற்கும் யாரா என்ற மோகினியை நோக்கிக் குறி பார்த்துச் சுட்டான். அமைதியாக உறங்கிக் கொண்டிருக்கும் கானகத்தை உசுப்பிவிட்டு ஓய்ந்தது அந்த ஒலி. மறுபடியும் அந்த அழகுக் குவியலை நோக்கிச் சுட்டான். ஆனால் அவள் — அந்த அழகு உருவம் இவனை நோக்கிப் புன்னகைத்தவாறே வந்து கொண்டிருந்தாள். இரு கரங்களையும் அகல விரித்து முன்னால் நீட்டியபடி — அவனை அப்படியே ஆரத் தழுவிக் கொள்ள விரும்புபவளைப் போல் நெருங்கிக் கொண்டிருந்தாள் அவள்.

''ஜூலியா.... ஜூலியா....!'' நழுவும் அந்த நினைவைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டான் அலான்ஸோ. துப்பாக்கியைக் குண்டாந்தடி போலப் பயன்படுத்த அதைத் திருப்பிக்கொண்டான். தன்னை நோக்கி வரும் அழகியை அடித்து வீழ்த்த அதை ஓங்கினான். ஒரு விநாடி யாரா பயந்தவளாகத் தயங்கினாள். விரித்த கைகளுடன் மெதுவாகப் பின்வாங்கினாள். ஆனால் அப்படி அவள் பின்னோக்கிச் செல்லும் போது அவனையுமே கவர்ந்து இழுத்துக் கொண்டு போனாள். தன் பாதங்கள் ஜில்லென்று நீரில் மூழ்குவதை உணர்ந்த போதுதான் அலான்ஸோ அதை அறிந்தான். அவளுடைய அந்த மாயக் கவர்ச்சியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளப் பரிதாபமாக முயன்றான் அவன். ஆனால் யாராவின் சக்தி மகத்தானதாக இருந்தது. அவன் முயற்சிகள் பயனற்றதாயின. அவன் கையிலிருந்த துப்பாக்கி நழுவியது. மடுவின் இருண்ட பகுதிக்கு அவனை இழுத்துக்கொண்டு போனாள். வெண் நிலவு மேனி அவனை வளைத்துக் கொள்ளுவது போல் வந்தது. கரங்களால், நீரை அளைந்தான். வெள்ளித் துகள்களாக நீர்க் கொப்புளங்கள் அவனைச் சூழ்ந்து மிதந்தன.

யாரா தன் இனிய குரலால் பாடலானாள். அந்தக் குரலின் மயக்கும் சக்தி அவன் உடலில் நாடி நரம்புகளுக்குள் எல்லாம் புகுந்து குடைவது போல் இருந்தது. அந்த இனிமையிலிருந்து. இன்பத்திலிருந்து. சுகத்திலிருந்து விடுபடப் போராடுவது பயனற்றது. முட்டாள்தனமானது—முடியாதது என உணர்ந்தான். அவன் கரங்கள் செயலற்றுத் துவண்டன. அப்போது அவன் இடையிலே இருந்த சுருக்குப் பை கைகளில் தட்டுப்பட்டது. அதனுள்ளேதான் அவன் காதலி கொடுத்த கிளிஞ்சல் இருந்தது. அதில் கைபட்டதும் அவனை அறியாமல் விரல்கள் அதனுள்ளிருந்து கிளிஞ்சலை வெளியே எடுத்தன. அவன் அந்தக் கிளிஞ்சலை எடுக்க ஆரம்பித்த உடனேயே யாராவின் கானம் மிகமிக இனிமையாக ஒலிக்கலாயிற்று. ஆனாலும் அலான்ஸோ உறுதியோடு ஜூலியாவின் கிளிஞ்சலைத் தன் காதிலே வைத்து அழுத்திக் கொண்டான்.


இப்போது மிருதுவான பாசம் மிகுந்த ஜூலியாவின் குரல் அவன் காதிலே ரீங்காரமிட்டது. உண்மையான சந்தோஷம், உண்மையான அன்பு, உண்மையான காதல் என்ன என்பதை ஜூலியாவின் குரல் உணர்த்திற்று. குடும்பம், குழந்தைகள், இன்பம், வாழ்க்கை என்ன என்பதை ஜூலியா

வின் இனிய ஜீவன் நிறைந்த குரல் கூறியது. ஜூலியாவின் குரலைக் கேட்டுக் கொண்டிருக்கும்போதே யாராவின் கானம் தேய்ந்து மறைந்தது. அந்த யட்ச கானம் மறைந்ததுமே அவன் உடலில் சக்திகூடியது. தன் இச்சைப் படி செயல்படத் தக்க பலம் பெற்றான் அலான்ஸோ. தன்னைத் தானே பார்த்துக் கொண்டான். யாரா இப்போது எங்குமே இல்லை. குளிர்ந்த மடு, வெல் வெட்டு மேகத்திலே வைரங்களாக மினுக்கும் நட்சத்திரங்கள். அமைதியாகத் தூங்கும் அந்தப் பெரிய நதியின் மூச்சுப் போலத் தூரத்தே கேட்கும் சலசலப்பு ஒலி. இரவு நேரப் பறவைகளின் கலகலப்பு இவை தவிர வேறு ஒலியே கேட்கவில்லை.

காலைக் கதிரவனின் பொற்கிரணங்களில் குளித்தபடி ஜூலியாவின் வீட்டை நோக்கிச் சென்றான் அலான்ஸோ. அவன் வரவுக்காகக் காத்திருந்தாள் மணப் பெண்ணாக ஜூலியா.

கோலாட்டம்





பெண் குழந்தைகள் பிரியமாக ஆடும் ஆட்டங்களுள் ஒன்று கோலாட்டம். கும்மி, கோலாட்டம் ஆகியவை பழைமையான விளையாட்டுக்கள்.

கோலாட்டம் என்பது வண்ணம் தீட்டிய இரு கோல்களை இரு கைகளிலும் பிடித்து ஒன்றால் ஒன்றைத் தட்டியும்; மற்றவரின் கைக்கோலைத் தட்டியும் இரு கோல்களையும் சேர்த்து மற்றவரின் கோலைத் தட்டியும் தாள கதிக்கு ஏற்பக் கால்களால் தட்டு நடை முதலியவை கொண்ட அடைவுகளைச் செய்துகொண்டும் ஆடும் ஒரு வகை நடனம். இரட்டைப்படை எண்ணிக் கையில் 2, 4, 6, 8, 10, 12 ஆடவர், பெண்மக்களால் கிராமிய நடனமாக ஆடப்படுவது.

முன்பெல்லாம் மார்கழி மாதத்தில் கிராமங்களில் ''ஜவந்தரை'' என்று ஒரு விழாக் கொண்டாடுவார்கள். மண்ணால் மாட்டின் உருவத்தைச் செய்து அதற்கு 'பஸவன்' என்று பெயர்சூட்டித் தினமும் பூஜித்துச் சிறுமிகள் தெருக்களில் கும்மியும், கோலாட்டமும் ஒவ்வொரு வீட்டு வாசலிலும் செய்துகொண்டு ஊர்வலம் வருவார்கள். எளிய நடையில் சின்னஞ் சிறு கதைகளையும் கடவுளரின் துதிகளையும் பாட்டாகப் பாடிக்கொண்டு கோலாட்டம் ஆடுவதும் உண்டு. பத்து நாட்கள் விழாக் கொண்டாடிக் கடைசி நாளில் ''பஸவனை'' ஊர்வலமாக நாதஸ்வரம் முதலிய வாத்தியக் கோஷத்துடன் எடுத்துச் சென்று ஆற்றிலோ, குளத்திலோ போட்டுக் கரைத்து விடுவார்கள்.

பல வர்ணக் கயிறுகளை மேலே கட்டி அவைகளின் நுனிகளைப் பற்றிக் கொண்டு கோலடித்து ஆடிக்கொண்டே அக்கயிறுகளைப் பலவித அழகிய கோலங்களாகப் பின்னுவதும், பின்பு அவைகளைப் பிரிப்பதுமே பின்னல் கோலாட்டம். கோலாட்டம் செய்யும்போது வட்டமாகவும் சதுரமாகவும், பாம்பு போல் நெளிந்தும், உட்புறமும் வெளிப்புறமுமாக மாறி மாறிச் செல்லும் நடையுடனும் மேலிருந்து பார்ப்பதற்கு அழகிய கோலம் போலத் தோன்றும்படி ஆடுவதும் உண்டு.

குஜராத் தேசத்தில் ஆடும் கோலாட்டத்துக்கு ராஸ் என்று பெயர். ஆண்களும் பெண்களும் சற்று நீண்ட வண்ணக் கோல்களை வைத்துக்கொண்டு ஆடுவார்கள்.

கேரளத்தில் ஆடவர்கள் கைப்பிடியுள்ள சிறு கோல்களைத் தட்டிக்கொண்டு தேர்ச்சி மிகுந்த கால் பயிற்சிகளுடனும் உடல் நெளிவுகளுடனும் கோஷ்டி நடனமாகச் செய்வார்கள். இதற்குக் 'கோல் களி' என்று பெயர். இதில் உள்ளே மணிகள் வைத்த வெண்கல வளையங்கள் கோல்களில் சேர்க்கப்படுவதும் உண்டு. இதனால் கோல்களைத் தட்டும்போது சதங்கை ஒலிப்பது போல் கலீர், கலீர் என இனிமையான சத்தம் ஏற்படும். இதில் பின்னல் கோலாட்டமும் உண்டு.

ஆட்டம் போடுபவர்களை அட்டைக்குப் படம் எடுத்தவர்: **சத்யகுமார்.** விளக்கம் கொடுத்திருப்பவர், சென்னை கலாக்ஷேத்திரத்தின் நடனப் பிரிவுத் தலைவி **எஸ். சாரதா.**

அன்று தேரோட்டத்தின் கடைசி நாளானதால் ஊரே திரண்டு அந்தக் கிராமத்தில் கூடியிருந்தது. தேர் கிளம்பியவுடன் அத்துடனேயே எல்லா ஜனங்களும் கோஷமிட்டபடியே பின்னால் நடக்கலாயினர். தேரையும் கடவுளையும் தரிசிக்கப் பக்கத்துக் கிராமங்களில் உள்ள மக்கள் வந்திருந்தனர். போஸ்ட்மேன் வீரபத்திரன் வழக்கம் போல் தபால் டெலிவரிக்குக் கிளம்பினான்.

அது ஒரு சிறிய ஊர். தாலுக்காவைச் சேர்ந்ததுதான் என்றாலும் முனிசிபாலிடி, பாங்க், தபாலாபீஸ், பெயர் பெற்ற ஈஸ்வரன் கோவில் எல்லாம் டவுனிலேயே. அதாவது ஊர் எல்லையிலேயே இருந்து வந்தன. பஸ் ஸ்டாண்டும் அங்கேயேதான் இருந்தது. அங்கிருந்து நாலு திசையில் நாலு ஊர்களுக்கும் பஸ் போய்க் கொண்டிருந்தாலும் நடமாட்டம் அங்கிருந்து வேலூருக்குச் செல்லும் நெடுஞ்சாலையில்தான் கொஞ்சம் அதிகமாக இருக்கும். அந்தச் சாலையில் ஊரிலிருந்து ஒரு மைல் வரை விட்டு விட்டு வீடுகளும் பலசரக்குக் கடைகளும் வெற்றிலை பாக்குக் கடைகளும் தென்படும். அதற்குப் பிறகு ஒரு மேடு. அது இறங்கி ஒரு பர்லாங்கு தூரம் வரை வீடுகளே கிடையாது. மேட்டிலிருந்து அரை பர்லாங் தூரத்துக்குப் பிறகு நெடுஞ்சாலையிலிருந்து ஒரு மண் மேடு இடதுபுறமாகப் பிரிகிறது. அது ஒரு சிறிய கிராமத்துக்கு இட்டுச் செல்கிறது. அங்கு மொத்தமே இருபது வீடுகளுக்கு மேல் கிடையாது. அதைச் சுற்றி வந்தால் அந்தக் கிராமத்திலிருந்து வரும் மற்றொரு மண் ரோடு அதை மெயின் ரோடுடன் இணைக்கிறது. பார்ப்பதற்கு ரயில்வே ஸ்டேஷனில் 'இன்', 'அவுட்' போலத் தெரியும். அந்த இரு சாலைகளும். முதலில் மெயின் ரோடிலிருந்து பிரியும் மண் சாலையைத் தாண்டி மெயின் ரோடில் அரை பர்லாங் தூரம் நடந்தால் புதிதாகக் கட்டப்பட்ட இரு வீடுகள் தென்படும். ஒரு வீட்டில் வீட்டுக்காரர் மட்டும் இருக்கிறார். மேலே யாரும் குடிவரவில்லை. அவரும் ஊருக்குள் இருக்கும் தன் நில புலன்களைப் பார்க்கப் போய்விடுவார். மற்றொரு வீட்டில் கீழே வீட்டுக்காரர்களும் மேலே பாங்கில் ஆபீஸராக இருக்கும் இளைஞனும் அவனுடைய வயதான தந்தையுமே இருக்கிறார்கள். அங்கிருந்து இன்னும் அரை பர்லாங் நடந்தால் ஊரிலிருந்து வந்து மெயின் ரோடில் சேரும் மற்றொரு மண் சாலையைக் காணலாம். இந்த எல்லா இடங்களுக்கும் தபால் டெலிவரி செய்வது வீரபத்திரன் ஒருவன்தான். காலையில் கிளம்பினால் எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு வர நடுப்பகல் ஒரு மணி, இரண்டு மணி ஆகிவிடும்.

அன்றும் டவுனிலிருக்கும் போஸ்ட் ஆபீஸிலிருந்து கிளம்பினான். நெடுஞ்சாலையில் உள்ள வீடுகளில் பெரும்பாலான வீடுகளில் அநேகம் பேர் தேரோட்டம் பார்க்கப் போய் விட்டனர். கடிதங்களை மட்டும் வீட்டினுள் போட்டுவிட்டு, மணியார்டர், ரெஜிஸ்டர் போஸ்ட் போன்றவைகளைத் திரும்ப எடுத்துக் கொண்டு மேட்டைத் தாண்டிக் கிராமத்துக்குச் செல்லும் மண் பாதையில் சைக்கிளில் இறங்கினான். ஊரிலும் பெரும்பாலானவர்கள் தேர் பார்க்கப் போயிருந்தனர் போலும். அதையெல்லாம் முடித்துக் கொண்டு மீண்டும் நெடுஞ்சாலைக்கு வந்தான். கடைசியாகப் பாக்கி நின்றது அந்தப் புதிய இரண்டு வீடுகள்தாம். அதில் ஒரு வீட்டில் மேல் வீட்டுக்காரருக்குத்தான் ரெகார்டெட் டெலிவரி ஒன்று இருந்தது. வேறு கடிதங்கள் கொடுக்கப்பட வேண்டியது இல்லை. அதை எடுத்துக் கொண்டு புது வீட்டருகில் இறங்கினான். கேட்டைத் திறக்கப் போகும் சமயம், ''போஸ்ட் மேன் ஸார், ஒரு நிமிடம் இங்கு வருகிறீர்களா?'' என்ற குரல் கேட்டுத் திரும்பினான். இரண்டு முரட்டு ஆசாமிகள் நின்றுகொண்டிருந்தார்கள். அட்ரஸ் தெரியாமல் திண்டாடுகிறார்கள் போலும்.



தந்தி(ரம்)!

கேட்டைத் திறக்கப் போனவன் அப்படியே திரும்பி அவர்கள் அருகில் சென்று ''அட்ரஸ் ஏதாவது தெரியவில்லையா ?'' என்று வினவினான். ''ஆமாம். இந்த அட்ரஸைப் பார்த்து விடு எங்கிருக்கிறது என்று சொல்லுங்கள். ரொம்ப நேரமாக அலைகிறோம்.'' என்றவாறு கையில் உள்ள காகிதத்தைக் காண்பித்தான், அவர்களில் மூத்தவனாகக் காணப்பட்டவன். அதை வாங்கிப் படித்தவன் திடுக்கிட்டான். காரணம் அதில் ''மரியாதையாக உன்னிடம் உள்ள பணத்தை எடுத்துக் கொடுத்துவிடு. கூச்சல் போட்டாலோ, தர மறுத்தாலோ அடுத்த நிமிடம் உன் உயிர் உன் உடலில் இருக்காது. நண்பர்களுடன் பேசுவதுபோல் சாதாரணமாக இரு'' என்று எழுதப்பட்டிருந்தது. பட்டப் பகலில் கொள்ளையா? அவனிடம் பணம் ஏது? அவன் அதைச் சொன்னான். ''மணியார்டர் பணம் இருக்கில்லே? அதை எடு''

அப்போதுதான் அவனுக்குச் சட்டென ஒரு யோசனை தோன்றியது. அந்த ரெக்கார்ட் டெலிவரியை மாடி வீட்டுப் பெரியவரிடம் கொடுத்துவிட்டு வருவதாகக் கூறிவிட்டு அவரிடம் சொல்லி உதவி பெறலாம் என்று நினைத்துக் கொண்டான் அவன். அவரிடம் அவனுக்கு மரியாதை உண்டு. அவருக்கும் இவனிடம் அபிமானம் உண்டு.

''அண்ணே, நீ கேட்டபடி மணியார்டர் பணத்தைக் கொடுத்துவிடுகிறேன். அதற்கு முன் இந்த ரெகார்ட் டெலிவரியை மட்டும் அவரிடம் கொடுத்து விட்டு வந்து விடுகிறேன். அவர் நான் கேட்டைத் திறக்க வரும் போது பார்த்து விட்டார். ரொம்ப நேரம் இங்கேயே நின்றால் அவருக்கு சந்தேகம் உண்டாகும். உனக்கும் எனக்கும் ஆபத்து. அதனால் அதை மட்டும் கொடுத்து விட்டு வந்து விடுகிறேன்'' என்றான்.

ஆனால் அவர்கள் பலே திருடர்களாக இருப்பார்கள் போலிருக்கு. ''நீ தனியாகப் போக வேண்டாம். என் சகா உன்னுடன் வருவான். நீ அந்த ஆளிடம் ஏதும் பேச முற்பட்டால் அப்புறம் கொலை விழும். ஞாபகத்தில் வைத்துக் கொள்'' என்று எச்சரித்தவாறு தன் சகாவையும் அவனுடன் அனுப்பினான்.

தான் ஏக்கச் சக்கமாக மாட்டிக் கொண்டு விட்டோம் என்பது வீரபத்திரனுக்குப் புரிந்து விட்டது. அந்த இடத்திலிருந்து இரண்டு பக்கமும் வீதி வெறுமனே சிரித்தது. அக்கம் பக்கத்தில் வேறு வீடுகளும் இல்லை, தெருவிலும் உச்சி வேளையாதலால் நடமாட்டமே இல்லை. இருந்த ஒரே துணை அந்தப் பெரியவர். அவரிடம் ஒன்றும் சொல்ல முடியாது. தன் விதியை நொந்தவாறு மௌனமாக மாடி ஏறினான். கூட வந்தவனின் 'ஷூ' செய்த 'டக்டக்' என்ற சப்தத்தைத் தவிர வேறு ஏதும் சப்தம் இல்லை. நேராக மேலே வந்தான். அவரிடம் கடிதத்தைக் கொடுத்துவிட்டு ரெக்கார்ட் டெலிவரி ஆதலால் நோட் புத்தகத்தை நீட்டினான் கையெழுத்துக்கு. ''யாரப்பா உன்னுடன்? உன் நண்பனா?'' என்று வினவியவாறே அவனிடமிருந்து நோட்டையும் பேனாவையும் வாங்கிக் கொண்டார். 'ஆமாம்' என்றவன் பேனா மூடியால் மாடிப் படி கைப்பிடிச் சுவரில் தாளம் போட்டான். அவர் கையெழுத்திட்டுக் கொடுத்தவாறே ''அப்படியா?'' என்று சொல்லவும் அவன் தலையைத் தொங்கப் போட்டவாறே கீழே இறங்கினான். திருடனின் சகாவுடன். வீரபத்திரன் யந்திரம் போல் இறங்கி வந்து கீழே இருந்த ஆளிடம் சேர்ந்துகொண்டான்.



பிறகு ''அண்ணே இங்கேயே நின்று உனக்குப் பணம் கொடுத்தா மாடி வீட்டுப் பெரியவர் பார்க்கக்கூடும். கொஞ்சம் நடந்து விட்டு அவர் பார்க்காத தூரம் போனதும் பணத்தைக் கொடுத்து விடுகிறேன். நீ கோபப் படாதே. நான் அவரிடம் ஏதும் சொல்லவில்லை. இவனையும் என் நண்பன் என்றுதான் சொன்னேன். வேண்டுமானால் உன் சகாவைக் கேட்டுப்பார். எனக்கு மட்டும் உயிர் மேல் ஆசையில்லையா? ஆதலால் ஒரு பத்தடி நடக்கலாம்'' என்றான். மூத்தவன் தன் சகாவைப் பார்க்க, அவனும் அதை ஆமோதிப்பது போல் தலையை அசைக்கவே, மூவரும் நடக்க ஆரம்பித்தனர். இருபதடி தூரம்கூட நடந்திருக்கமாட்டார்கள். அதற்குள் தானும் நின்று வீரபத்திரனையும் நிறுத்திய மூத்தவன், ''சரிசரி, பணத்தை எடு. நாங்கள் போக வேண்டும்'' என்றான் அவசரத்துடன். வீரபத்திரன் பணத்தை எடுத்து நிதானமாக எண்ணலானான்.

''யோவ், என்னையா ஏமாத்தப் பார்க்கிறே. அப்படியே கொடுய்யா. ஏன் எண்ணிக்கிட்டிருக்கே'' என்றவாறு அந்த நோட்டுக்களைப் பிடுங்கப் போனான். அதைக் கொடுக்காமல், ''அண்ணே, கொஞ்சம் பொறு. இந்தப் பணத்தை யெல்லாம் நான்தானே கையை விட்டுக் கட்டியாக வேண்டும். எவ்வளவு என்று தெரிந்து கொள்ள வேண்டாமா? ஒரே நிமிடத்தில் எண்ணிக் கொடுத்து விடுகிறேன். கொஞ்சம் கருணை காட்டு'' என்றவாறு எண்ணினான். பிறகு அவைகளை அப்படியே கொடுத்தான். அதை வாங்கிக் கொண்ட மூத்தவன், ''இதோ பார், கூச்சல் போட்டு அந்தக் கிழவரையோ வேறு ஏதும் வண்டி வந்தால் மடக்கி ஏறியோ எங்களைப் பிடிக்க நினைக்காதே. இந்த உன் சைக்கிள் காற்றை எடுத்து விட்டேன். நாங்கள் அந்த மேட்டுக்கு அந்தப் புறம் போன பிறகு இதைத் தள்ளிக்கொண்டு வா'' என்று கூறி விட்டுத் தங்கள் சாமர்த்தியத்தை தாங்களே மனத்துக்குள் மெச்சியவாறு நடக்கத் திரும்பினான். அப்போது அந்தப் பக்கம் ஒரு டாக்ஸி வந்தது. இருவரும் வீரபத்திரனுடனேயே நின்று கொண்டு ஏதோ பேசுவது போல் டாக்ஸிக்கு முதுகைக் காட்டி நின்றனர். டாக்ஸி அவர்கள் அருகிலேயே வந்து நின்றவுடன் பின்னாலிருந்து இருவர் இறங்கினர். அந்தச் சப்தத்தைக் கேட்டுத் திரும்பிய இருவரும் ஓடுவதற்குள் டாக்ஸியிலிருந்து இறங்கிய இன்ஸ்பெக்டரும் கான்ஸ்டபிளும் ஒரே தாவலில் அவர்களைப் பிடித்துக் கொண்டனர். ''போஸ்ட்மேனிடம் மிரட்டிப் பணமா திருடப் பார்க்கிறீங்க? நடங்கடா ஸ்டேஷனுக்கு!'' என்று கழுத்தில் ஓங்கி அறைந்து இருவரையும் ஒரே உதையில் உள்ளே தள்ளிய இன்ஸ்பெக்டர் போஸ்ட்மேனைப் பார்த்து ''நல்ல வேளையில் உடனே செய்தியைச் சொன்னார்கள். நீங்களும் ஸ்டேஷனுக்கு வந்து ஒரு ரிப்போர்ட் எழுதிக் கொடுத்து விட்டுப் பணத்தையும் வாங்கிக்கிட்டுப் போங்க'' என்றவாறு அவன் சைக்கிளையும் தூக்கி மேலே போட்டார்.

திருடர்கள் இருவரும் விழித்தனர். 'இவன் எப்போதடா சேதி சொன்னான் போலீசுக்கு?' என்றவாறு யோசித்தனர். மறுநாள் வீரபத்திரன் தந்திக் கிளார்க்கான தன் நண்பனுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டிருந்தான். ''அப்பனே! எனக்குப் பொழுது கிடைக்கும்போதெல்லாம் உன்னுடன் உட்கார்ந்து தந்தி அடிக்கும் வேலையைக் கற்றுக் கொண்டது நல்லதாகப் போயிற்று. நேற்று நான் மாட்டிக் கொண்டபோது திருடனின் 'ஷூ' செய்த 'டக்டக்' சப்தம் எனக்கு உடனே தந்தியை ஞாபகப்படுத்தியது. அந்தப் பெரியவரும் போஸ்ட் மாஸ்டராக இருந்து ரிடையர் ஆனவர் ஆதலால் அவருக்குத் தந்தி மூலமே விஷயத்தைத் தெரியப்படுத்த முடிவு செய்தேன். அவர் கையெழுத்துப் போடப் பேனாவை வாங்கிய உடனேயே கண்களால் மூடியைக் காட்டி ஜாடை செய்தேன். கைப்பிடிச் சுவரில் பேனா மூடியால் தந்தி பாஷையில் ''இந்தத் திருடனிடம் மாட்டிக் கொண்டேன். உங்கள் உதவி தேவை'' என்று தெரிவித்தேன். அவர் உடனே புரிந்து கொண்டு ''அப்படியா?'' என்றார். என் நண்பனா என்று விசாரித்ததற்கு நான் ஆமாம் என்று கூறியதற்காகவே அவர் அப்படிக் கேட்பதாக அந்தத் திருடன் நினைத்துக் கொண்டிருந்தான். அவர் போலீசுக்கு உடனே போன் செய்திருக்கிறார். நானும் அவர்களுக்கு உடனே பணம் கொடுக்காமல் கொஞ்சம் தாமதித்தேன். அதற்குள் போலீஸ் வந்து அவர்களைப் பிடித்துக் கொண்டு விட்டது. இப்போது சொல். உன் தந்திக்குத்தானே தாங்க்ஸ் சொல்லணும்?'' என்றான் வீரபத்திரன். ''இல்லையப்பா. உன் தந்திரத்துக்குத்தான் சொல்லணும்'' என்று 'தந்தி'க்கு அழுத்தம் கொடுத்து நண்பன் கண் சிமிட்டவே இருவரும் சிரித்தனர்.

வளம் தரு வீதியிலே....

இருக்க இடமில்லாதோருக்கு இலவச வீட்டுமனை

கிராமப் புறங்களில் நிலமில்லா விவசாயத் தொழிலாளருக்கு நிலம் கொடுக்கப்படுகிறது. ஏற்கனவே 32,42,406 வீட்டு மனைகள் இவ்வாறு கொடுக்கப்பட்டுள்ளன. 20-அம்சத் திட்டத்தின் கீழ் இன்னும் அதிகமானோருக்கு மனைகள் கொடுக்கப்பட இருக்கின்றன.

நாடெங்கும் 9 வீடுகட்டும் திட்டங்கள் செயல்படுகின்றன.

அனுமதிக்கப்பட்ட 8.8 லட்சம் வீடுகளில்
6.43 லட்சம் வீடு-கள் கட்டி
முடிக்கப்பட்டுவிட்டன.

நெஞ்சில் உரமும்
செயலில் திறனும்
உறுதுணை நிற்கும்



davp 75/453

மாய மோதிரம்

வாண்டு மாமா



5

நீலவேணிக் குதிரையின் மீது நெடுந்தூரம் பிரயாணம் செய்தான் விஜயன். ஆரம்பத்தில் அவன் நினைவையெல்லாம் புவனு நிறைத்திருந்தாலும், நாளாக ஆக அந்த நினைவுக்கு மேலாக பராக்கிரமச் செயல்கள் புரிய வேண்டும், சாகஸங்கள் மிகுந்த வீரச் செயல்களில் ஈடுபட்டு உன்னத நிலைக்கு உயர வேண்டும் என்ற பரபரப்பு மிகுந்தது. எண்ணங்களின் தாலாட்டிலே காடுகளைக் கடந்து பல நாடுகளின் வழியே நெடுநாள் பிரயாணம் செய்தான். முடிவிலே ஸ்வர்ணு நதியின் கரைக்கு வந்து சேர்ந்தான். அதன் நீண்ட நெடுங் கரைகளில்தான் எத்தனை எத்தனை சாம்ராஜ்யங்கள்?

நதியின் எதிர்க் கரையிலே நெடிதுயர்ந்ததொரு குன்றின் மீது கம்பீரமானதோர் அரண்மனை காணப்பட்டது. பல நாடுகளைக் கடந்து வந்த போது ஏற்படாத ஓர் எண்ணம் இந்த அரண்மனையைப் பார்த்ததும் உண்டாயிற்று அவனுக்கு. ''இந்த நாட்டு மன்னரின் அவையிலே என் வீரத்துக்கு வேலை கிடைக்குமா என்று முயற்சிக்கலாமா'' என்று நினைத்தான். அவன் தன் பிரயாணத்திலே எங்கும் தங்கவில்லை. யாருடனும் பழகவில்லை. நதியை நீந்திக் கடப்பது 'இயலாத காரியம் என்பதை அதன் ஆழமும் வேகமும் உணர்த்தின. குதிரையோடு நீந்துவ தென்பதும் முடியாத காரியம். வல்லமை மிக்க வாளும், உரம் மிக்க தோளும் இருக்கும்போது தொய்ந்து போக வேண்டியதில்லையே. காட்டு மரங்களை வீச்சுக்கு ஒன்ருக வெட்டி வீழ்த்தினன். அடி மரங்களைத் துண்டாடிக் காட்டுக் கொடிகளைக் கொண்டு தோணியாக உருவாக்கினன். சுவர்ணு நதியிலே அந்தக் கட்டுமரத்தை மிதக்க விட்டான். நீலவேணியோடு தானும் அதில் ஏறிக் கொண்டான். நீண்டதோர் கொம்பு துடுப்பாக உதவியது. சுலபமாக ஆழமும் வேகமும் மிக்க நதியைக் கடந்து மறு கரை சேர்ந்தான்.

குபேரபுரி என்ற நாட்டுக்கு வந்திருந்தான் இப்போது விஜயன். அந்நாட்டை மன்மத வர்மன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். புகழ் மிக்க வமிசத்திலே வந்தவன் மன்மதன். குடிமக்களின் நல்வாழ்வே தன் வாழ்வு என்று எண்ணி ஆட்சி புரிந்தான். விஜயன் நீலவேணி மீதமர்ந்தபடி ராஜ வீதியிலே புதிய நாட்டின் அழகைப் பார்த்தபடி மெதுவாகப் போய்க் கொண்டிருந்தான். அத்தனை கண்களும் அந்தக் குதிரையின் அழகிலும் பராக்கிரமத்தைப் பறை சாற்றும் அவன் கம்பீர வடிவிலேயும் லயிக்கலாயின. தத்தம் அலுவல்களை மறந்து அந்த அழகிய அந்நியனையே வியப்போடு பார்த்தனர் மக்கள்.

அரண்மனைக் காவலாளிகள் விஜயனை அதிக நேரம் காக்க வைக்கவில்லை. மன்னரைக் காண வேண்டும் என்றதும் மகிழ்ச்சியோடு வழி விட்ட



னர். ஒரு காவலாளி விஜயனை மன்னரின் அவைக்குத் தானே அழைத்துப் போவதாக உடன் வந்தான். குபேர புரியில் அதன் பெயருக்கு ஏற்பக் குபேர சம்பத்தைக் குவித்திருந்தான் மன்னன் மன்மதன். நிமிர்ந்து பார்க்கு மளவுக்கு உயர்ந்த விதானங்களையும் உப்பரிகைகளையும் • தூண்களையும் கொண்டிருந்தது அரண்மனை. அவையிலே அமர்ந்திருந்தார் மன்னர். இரு மருங்கிலும் பிரபுக்களும் நிர்வாக அதிகாரிகளும் நிறைந்திருந்தனர். விஜயன் உள்ளே புகுந்ததும் அத்தனை பேருடைய பார்வையும் அவன் மீது தான் பதிந்தன.

''வீர வாலிபனே! நீ எந்த நாட்டைச் சேர்ந்தவன்? உன் பெயரென்ன?'' என்று கேட்டான் மன்னன் மன்மதன்.

''இவ்வுலகமே என் நாடு. என் பெயர் விஜயன். என் வீரத்தினால் புதிய பரம்பரையை நான் இனிமேல் தான் உருவாக்கப் போகிறேன். அதற்கு உங்கள் உதவியும் ஆதரவும் கிடைக்குமா என்று அறியவே இங்கு வந்திருக்கிறேன்'' என்றான் விஜயன்.

குபேர மன்னன் குறுநகை புரிந்து கொண்டான். தான் ஓர் அநாதை என்பதை எவ்வளவு நாசூக்காக அதே சமயத்தில் தன்னம்பிக்கையோடும் கூறுகிறான் இந்த வாலிபன்?' என்று பாராட்டியது மன்னனின் மனம். ''உன் வீரத்துக்கு இங்கு நிச்சயம் வரவேற்பு உண்டு. மன்மதபுரி கர்வம் கொள்ளும் வகையில் உன் பராக்கிரமத்தைப் பரிமாறி நீ வாழ்வு பெறலாம். என் மெய்க்காவல் படையின் தலைமைப் பதவியை உனக்கு அளிக்கிறேன்'' என்றான் மன்மத வர்மன்.

''இதை மிகப் பெரிய கௌரவமாகக் கருதி ஏற்றுக் கொள்கிறேன்'' என்று கூறி வணங்கினான் விஜயன். அவையினர் கைதட்டி ஆரவாரமிட்டனர்.

இத்தனை நேரமும் விஜயனின் கம்பீரத்தையும் ஒப்பற்ற எழிலையும் பேச்சையும் ஓர் எழில் உருவம் அப்படியே விழுங்கிக் கொண்டிருந்தது. மன்னரின் அருகிலேயே அமர்ந்திருந்த அந்த உருவம் விஜயனின் ஒவ்வொரு அசைவையும் ரசித்து மகிழ்ந்துகொண்டிருந்தது. அத்தனை அழகுப் பதுமையாக அமர்ந்திருந்தவள் ஒரு பெண். மன்னர் மன்மத வர்மரின் அருமைத் தங்கை அவள். அன்றலர்ந்த அல்லியின் மேனியுடைய அவ்வாரணங்குக்கு அமுதா என்று பெயர்.

அதே மாதிரி இன்னொரு உருவமும் விஜயனை எடை போட்டுக் கொண்டிருந்தது — அதற்கு நேர் மாறான எண்ணத்துடன். அது ஓர் ஆண்மகன். அவன் பார்வையிலேயே குரோதமும் பொறாமையும் பொங்கி வழிந்து கொண்டிருந்தன. மன்னருக்கு மிக மிக நெருங்கியவன்தான் அவன். உடன் பிறவாத் தம்பி. நாக வர்மன் என்று பெயர். சூழ்ச்சி செய்வதில் வல்லவன். பெயருக்கு ஏற்ப அவன் பார்வையிலும் செயலிலும் விஷத்தின் வேகம் உண்டு. தந்திரசாலி. நயவஞ்சகன். மன்மத வர்மருக்குத் தன் தம்பி நாகனிடம் மிக்க நம்பிக்கை. அப்படி நடந்து கொள்ளுவதில் வல்லவனும்கூட அவன்.



குட்டிச்சாத்தான் என்று அழைக்கப்படும் குள்ளர்களின் நட்பும் உண்டு நாகனுக்கு. குண்டோதரனின் கதையையும் அறிந்தவன் அவன். ஸ்வர்ண நதியின் மாயத் தங்கத்தின் மகிமையையும் அது பல கைமாறி இப்போது ஒரு கானகத்து வீரனின் வசமிருப்பதையும் ஒற்றர்களின் மூலம் அறிந்திருந்தான் நாகன். 'அந்த வீரன் இவனாக இருக்குமோ?' என்ற ஓர் எண்ணம் அவன் உள்ளத்தில் முளை விட்டது. எப்படியானாலும் விஜயனை அவனுக்குப் பிடிக்கவில்லை.

இளவரசி அமுதா தன் விழிகளாலேயே விஜயனை விழுங்குவதையும் கவனித்தான் நாகன். மனிதர்களின் மன ஓட்டத்தைப் பகுத்தறியும் ஆற்றல் மிக்கவன் அக்கொடியவன். அமுதா அவனை அடைய ஆசைப்படுகிறாள் என்பதைப் புரிந்து கொண்டவனின் முகத்திலே புன்முறுவல் பூத்தது. 'அமுதாவைக் கொண்டே நான் என் காரியத்தையும் சாதித்துக் கொள்ளுவேன்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

விஜயனை வஞ்சித்து அவனிடமுள்ள மாயத் தங்கத்தைத் தனதாக்கிக் கொண்டு விடுவதென்று அப்போதே முடிவு கட்டிக் கொண்டான் நாகன். அவன் ஊகம் சரிதான் என்பதை ஒற்றர்களும் உறுதிப்படுத்தி விட்டனர். விரைவிலேயே விஜயன் மன்னர் மன்மத வர்மரின் அன்புக்குப் பாத்திரமானவனாகி விட்டான். விஜயனைக் கௌரவிப்பதற்காக மன்னர் ஒரு நாள் ஒரு விருந்து அளித்தார். கோலாகலமான அந்தக் கொண்டாட்டத்தைத் தன் திட்டத்தின் தொடக்க விழாவாகப் பயன்படுத்திக் கொண்டான் நாகன்.

விஜயனின் மீது பதித்த பார்வையை பெயர்த்து எடுக்க இயலாத நிலையில் அலமந்து போயிருக்கும் தன் சகோதரி அமுதாவின் அருகே போனான் நாகன். மெள்ள அவள் உள்ளத்தின் கள்ளமறியப் பேச்சுக் கொடுத்தான்.

''என்ன அமுதா, இன்றைய விருந்தாளி ரொம்பவும் பாக்கியம் செய்திருக்கிறான் போலிருக்கிறதே. இளவரசி அமுதாவின் விசேஷக் கவனிப்புக்கும் கண்காணிப்புக்கும் யாருமே இதுவரை இப்படி இலக்கானதில்லை என்று நினைக்கிறேன்'' என்றான் கபடமாகச் சிரித்துக் கொண்டே.

அமுதாவின் முகம் அழகாகச் சிவந்தது. தன் உள்ளத்தைப் புரிந்து கொண்டு விட்டதில் ஒரு பக்கம் மகிழ்ச்சியாக இருந்தாலும் பெண்களுக்கே உரிய வெட்கமும் அவளைச் சூழ்ந்து கொண்டது. ''எந்த விருந்தாளியை நான் அலட்சியப்படுத்தியிருக்கிறேன், சொல் அண்ணா? பெரிய அண்ணா யாரைக் கௌரவித்தாலும் அவர்களை நாமும் கௌரவிப்பதுதானே முறை. இன்று மட்டும் என்ன புதுமை?''

''புதுமை இருப்பதினால்தானே சொல்லுகிறேன். இந்த வாலிபனை வாழ்க்கைத் துணைவனாக்கிக் கொள்ள உன் உள்ளம் விரும்புகிறது. இது புதுமை இல்லையா?''

''என் மனத்துக்குள்ளே புகுந்து பார்த்ததைப் போலச் சொல்லுகிறாயே அண்ணா பலே பலே!'' என்று சிரித்தாள் அமுதா.

''பாராட்டு இருக்கட்டும். நான் சொல்லுவது உண்மையானால்—அப்படியொரு எண்ணம் உனக்கு இருக்குமானால் அதை மறந்துவிடு.''

''ஏன் அண்ணா அப்படி?'' ஏமாற்றத்தின் தாக்குதலைத் தாங்கிக் கொள்ள முடியாத தவிப்புடன் கேட்டாள்.

''பார்த்தாயா, இப்போதாவது நான் உன் மனத்தினுள் புகுந்து பார்த்திருக்கிறேன் என்பதை ஒப்புக் கொள்ளுகிறாயா?'' வஞ்சகமாகச் சிரித்தான் நாகன்.

''என்னை ஏமாற்றுவதற்காகத்தான் அப்படிச் சொன்னீர்களா? ஏன் அண்ணா அந்த வீரனுக்கு என் கரம் பற்றும் தகுதி கிடையாது என்று கருதுகிறாயா?''

''தகுதி கிடையாது என்று சொல்லவில்லை. உன் அழகுக்கு ஏற்ற ஆண்மை மிக்க வாலிபன்தான். ஆனால் அவனுக்காக வேறொரு அழகி காத்துக் கொண்டிருக்கிறாள். அவள் நினைவாகவே இவனும் இருக்கிறான். அத



னால்தான் இந்தக் காளை உனக்குக் கணவனாகும் வாய்ப்பில்லை என்றேன்.''

''இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும் அண்ணா?'' அழுகையாகும் நிலையிலிருந்தது அமுதாவின் குரல்.

''சாம்ராஜ்யத்தைக் கட்டிக் காக்கும் பொறுப்பில் உள்ளவர்கள் 'தகவல்களை எப்படிச் சேகரிக்கிறார்கள் என்பதை விளக்கிக் கொண்டிருக்கலாமா? நம்மிடம் சேவை செய்ய வந்திருப்பவர்களைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியது என் கடமை யல்லவா?''

''ம்...'' நெடியதோர் பெருமூச்சு வெளிப்பட்டது அமுதாவிடமிருந்து.

''அமுதா! வீண் கவலை எதற்கு? நீ இவனை உன் கணவனாக்கிக் கொள்ள மனப்பூர்வமாக விரும்புகிறாயா சொல். அவன் உள்ளத்திலிருப்பவளின் நினைவையே மறக்கடிக்கும் மார்க்கம் உன் அண்ணனுக்கு உண்டு தெரியுமா?''

''அதெப்படி அண்ணா, ஒரு மனிதனின் நினைவுகளையே மறக்கடித்துவிட முடியுமா என்ன?''

''உன் அண்ணன் நாகனால் ஆகாதது ஏதுமே இல்லை என்பதை இன்னும் நீ தெரிந்து கொள்ளவில்லையே என்று தான் எனக்கு வருத்தமாக இருக்கிறது. போகட்டும். விஜயனை உன் மணாளனாக்கி வைக்க வேண்டும், அவ்வளவு தானே?''

''போ, அண்ணா!'' என்று செல்லமாகச் சிணுங்கியபடி தன் சிவந்த முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள் அமுதா.

''கவலைப்படாதே அமுதா. விரைவிலேயே அவனை உன் கணவனாக்கி வைக்கிறேன். அவன் நினைவில் குடிகொண்டிருக்கும் காதலியை அவன் நேருக்கு நேராகப் பார்க்கும்போதுகூட புரிந்து கொள்ள முடியாததோர் நிலைமையை அவன் அடையும்படி செய்கிறேன். ஆனால் நான் கூறுவதுபோலெல்லாம் நீ கேட்க வேண்டும். சம்மதமா?'' என்றான் நயவஞ்சகனான நாகவர்மன்.


''மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கையை உருவாக்கித் தருகிறேன் என்று ஒருவர் கூறும்போது அதற்கு ஒத்துழைப்புத் தர எந்தப் பெண்ணாவது மறுப்பாளா அண்ணா?''

''விஜயனை அடிக்கடி சந்திப்பதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொள். உன்னோடு சகஜமாகப் பழகுமாறு அவனைப் பக்குவப்படுத்தி வை. அதன் பிறகு என்ன செய்ய வேண்டும் என்பதைப் பிறகு நான் கூறுகிறேன்'' என்றான் நாகன்.

விஜயனை அப்போதே கணவனாகக் கரம் பற்றி விட்டதைப் போன்ற களிப்பிலே மூழ்கினாள் அமுதா.

(தொடரும்).

தெரியுமா ?



2186. அமெரிக்காவில் உள்ள எம்பயர் ஸ்டேட் பில்டிங் — கட்டடத்தில் மொத்தம் எத்தனை மாடிகள் தெரியுமா?

2187. சிந்துநதி நாகரிகத்தைப் பற்றிய ஆராய்ச்சி வல்லுநரின் பெயர் தெரியுமா ?

2188. இந்தியா தன் ரூபாயின் மதிப்பைக் கடைசியாகக் குறைத்தது எந்த ஆண்டு ? 1965—1966—1967 — 1971 ?

2189. அக்வேரியம் எனப்படும் காட்சி சாலைக்குப் போனால் நீங்கள் எதைக் காண்பீர்கள் ?

2190. பாரதத்தின் எந்த மாகாணத்தில் ஆண்களைவிடப் பெண்கள் அதிகம் ?

2191. குதுப் உதின் ஐபக்—என்பவர் துக்ளக் வமிசத்து — கில்ஜி வமிசத்து— அடிமை வமிசத்து — லோதி வமிசத்துப் புகழ்பெற்ற அரசர் — இதில் எது சரி ?

2192. அடுத்த ஆசிய விளையாட்டுக்கள் எங்கே நடக்கப் போகிறது, தெரியுமா ?

2193. பிளாக் பகோடா — எனப்படும் கறுப்பு ரதங்கள் இருப்பது மகாபலிபுரத்தில், கோலாலம்பூரில், கோனாரக்கில், ஃபோம் பென்னில்? எது சரி ?

2194. பத்து ரூபாய் நோட்டில் ஒருவருடைய கையெழுத்து உள்ளதே, அது பாரத ஜனாதிபதியுடையதா? பிரதமருடையதா? நிதிமந்திரியுடையதா?

2195. அணுசக்தியினால் இயங்கும் உலகின் முதல் கலங்கரை விளக்கை எங்கு யார் அமைத்திருக்கிறார்கள், தெரியுமா ?

2196. இன்றைய இந்திய ரூபாயின் மதிப்பு எவ்வளவு தெரியுமா ?

2197. காமன்வெல்த் அமைப்பில் பத்தொன்பதாவது குடியரசாகச்சேர்த்துக் கொள்ளப்பட்ட நாடு எது தெரியுமா ?

2198. டாலர் என்றால் உங்களுக்குத் தெரியும். ஈரோ டாலர் (Euro dollers) என்றால் தெரியுமா ?

2199. தங்க மயில் எதற்காக வழங்கப்படும் பரிசு தெரியுமா ?

2200. செங்மு (Sengmu) தீவு— அரபிக் கடல், தென் சீனக் கடல், இந்தியக் கடல், அட்லாண்டிக் கடல்—இவைகளில் எதில் உள்ளது ?

2201. பாரதத்தின் எந்த மாகாணம் அல்லது யூனியன் டெரிடரியில் எழுத்தறிவின்மை மிக அதிகம்.

2202. ஐக்கிய அமெரிக்காவின் சுதந்திர தினம் எப்போது தெரியுமா ?

2203. தரையில் பிரயாணம் செய்யும் தூரத்தை மைல்கள், கிலோமீடர்களில் கூறுகிறோம் இல்லையா? கடல் பிரயாணத்துக்கான தூரத்தைக் குறிக்கும் அளவுக்கு என்ன பெயர்?

2204. டிசம்பர் 10ந் தேதியை ஒரு குறிப்பிட்ட தினமாகக் கொண்டாடுகிறார்கள். அது என்ன தெரியுமா ?


2205. ஜாட்ரல் பாங்க் (Jadrel Bank) என்பது என்ன தெரியுமா ? இந்த பாங்க் எங்குள்ளது ?



தெரியுமே !

2186. நூற்று இரண்டு மாடிகள். 2187. சர் மார்ட்டிமர் வீலர். 2188. ஜூன் 1966. 2189. கடல் ஜீவராசிகளான மீன்களை. 2190. கேரளாவில். 2191. அடிமை வமிசத்து மன்னர். 2192. சிங்கப்பூரில். 2193. கோனாரக்கில். 2194. குறிப்பிட்டுள்ள எவருடையதுமல்ல. ரிஸர்வ் பாங்க் கவர்னருடையது. 2195. பால்டிக் கடலில் ரஷ்யா அமைத்திருக்கிறது. 2196. இருபத்தியேழு புள்ளி ஆறு பைசாக்கள். 2197. மால்டா. 2198. ஐரோப்பியப் பொதுச் சந்தையில் புழங்கும் பொது நாணயத்துக்குப் பெயர். 2199. சர்வதேசத் திரைப்பட விழாவில் பாரதம் மிகச் சிறந்த கதைப் படத்துக்கு வழங்கும் மிக உயர்ந்த விருது கோல்டன் பீகாக். 2200. தென் சீனக் கடலில். 2201. அருணாசலப் பிரதேசத்தில். 2202. ஜூலை நான்காம் தேதி. 2203. நாட்டிகல் மைல்கள் (Nautical Miles) என்று பெயர். 2204. மனித உரிமை தினமாக (Human Rights Day) 2205. லண்டனிலுள்ள வானிலை ஆராய்ச்சி நிலையத்துக்குத்தான் இப்பெயர்.

கோகுலத்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்.




நினைக்கும் நெஞ்சு
இனிக்குமே, மணக்
கோலத்தில் அன்று நீங்கள்
நின்ற நன்னாள்—மணியான மணப்பெண்
என்று மலர்மாரி தூவினார்களே உங்கள் மீது.
இன்றோ, உங்கள் மகளுக்குத் தை பிறந்தாச்சு,
வருகிற வாரம் மேளம் முழங்குமே. நினைவுகள் எல்லாம்
நிலைத்திட வேண்டுமன்றோ? அதற்கொரு ஆல்பம் வேண்டும்
படமெடுக்க ஒரு க்ளிக்-III.

விலை:
ரூ. 70.25,
எக்ஸைஸ் தீர்வை
உள்ளிட்டது.
தல வரிகள்
தனி.

Agfa

க்ளிக் III

குறிவைத்துச் சடக்கெனச் சுடும் காமெரா.



AGI

ஏகபோக விநியோகஸ்தர்கள்:
ஆக்பா-கேவார்ட் இந்தியா லிமிடெட்
மர்ச்சன்ட் சேம்பர்ஸ், 41 நியூ மெரின் லைன்ஸ், பம்பாய்-400 020.
கிளைகள்: பம்பாய் • நியூ டெல்லி • கல்கத்தா • சென்னை.
© புகைப்படச் சாதனத் தயாரிப்பாளர்களான ஆக்பா-கேவார்ட், ஆன்ட்வெர்ப்பிலிருந்துள்ள அவர்களின் ரெஜிஸ்டர்டு டிரேட் மார்க்.

SIMOES/AG/17C TM

தயாரிப்பாளர்கள்: **நியூ இந்தியா இண்டஸ்ட்ரீஸ் லிட்.,** பரோடா • பம்பாய்

REGISTERED No. M 9040

GOKULAM Childrens Fortnightly
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 50